

# 2023

# වාර්ෂික වාර්තාව

# ஆண்டறிக்கை

# ANNUAL REPORT



කොළඹ විශ්වවිද්‍යාලයීය කෘෂි තාක්ෂණික හා ග්‍රාමීය විද්‍යා ආයතනය

கொழும்புப் பல்கலைக்கழக கமத்தொழில் தொழில்நுட்பவியல் மற்றும் கிராமிய விஞ்ஞானங்களுக்கான நிறுவனம்

University of Colombo Institute for Agro-Technology and Rural Sciences

# ஆண்டறிக்கை

# 2023

# எமது தூரநோக்கு

*இலங்கையின் இயற்கை வளங்களை பேண்தகு ரீதியில் முகாமைப்படுத்தி தொழில் முயற்சிசார் விவசாயத் துறையை வளர்ப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் மிகச் சிறந்த நிறுவகமொன்றாகப் பரிணமித்தல்*

## *எமது பணிக்கூற்று*

*மிகவும் பயனுள்ளதாக இருக்கின்ற ஆராய்ச்சித் தகவல்களை உருவாக்குதல் மற்றும் ஆக்கபூர்வமான தொழில் முயற்சிக்கான ஒரு மூலோபாய, பங்கேற்பு மற்றும் சிறப்பான சமூகமொன்றின் நிமித்தம் சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்ட மற்றும் நிலைபெறுதகு சிறந்த கல்வி முறையொன்றை நிலைபெறுதகு இயற்கை வளங்கள் முகாமைத்துவத்தினூடாக உருவாக்குதல்.*

**பணிப்பாளரின் ஆசிச் செய்தி:**



இந்த நிறுவகம் முதற் தடவையாக கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த வகையில் ஹம்பாந்தோட்டை வெலிகத்தவில் மாகம்புர விவசாயத் தொழில்நுட்பம் மற்றும் பிரஜைகள் சேவை நிலையமாக 2000 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிலையத்தின் வரலாறு 1998 ஆம் ஆண்டு வரை பின்னோக்கிச் செல்வதுடன் இந்தக் காலப்பகுதி பூராவும் பிரஜைகளுடன் தொடர்புகளைப் பேணியவாறு, அவர்களுக்கு தொழில்நுட்பம் மற்றும் அறிவைப் பெற்றுக்கொடுப்பதற்கும் பிராந்தியத்தில் விவசாயம் மற்றும் விவசாயக் கைத்தொழிலின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக ஒத்துழைப்புடன் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்த நிறுவகம், 2008 இல் கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகமாக (UCIARS) பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இலங்கையின் முன்னணி நிறுவகமொன்றாக விவசாயம் மற்றும் விவசாயக் கைத்தொழில்களில் ஈடுபடுபவர்களைப் போன்றே உயர் தரத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கு விவசாயத்தை அடிப்படையாகக்கொண்ட பட்டத்தை (விவசாயத் தொழில்நுட்பப் பட்டம்) வழங்குவதற்காக தரமுயர்த்தப்பட்டது. அனைத்துப் பாடங்களும் இணையவழிக் கற்கை முகாமைத்துவ முறைமையில் காணப்படுவதனால் விரிவுரைகளுக்கு கலப்புக் கற்கைக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்துவதனூடாக செயன்முறை மற்றும் களச் சுற்றுப் பயணப் பகுதிக்கான மாணவர்களின் பங்கேற்பு கணிசமானளவினால் அதிகரித்துள்ளது. எமது கற்கை நிகழ்ச்சித் திட்டங்களானது சிக்கல்களைத் தீர்த்தல், பகுப்பாய்வு ரீதியிலான திறன்களைப் போன்றே எழுதுவதற்கான மற்றும் தொடர்பாடல் திறன்களை மேம்படுத்துவதற்காக மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. எனவே இலங்கையின் ஏனைய அரச பல்கலைக்கழகங்களினூடாக உருவாக்கப்படும் விவசாயத்துறைப் பட்டதாரிகளுடன் ஒப்பிடும்போது எமது மாணவர்களுக்கு மிகச் சிறந்த நடைமுறை அறிவு மற்றும் திறன் காணப்படுகின்றது.

பண்ணை உற்பத்தித் திறனை உயர்த்தும் நோக்கில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகத்தினூடாக (UCIARS) உயர் தரமான நடவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றது (அதாவது உயர் தரமான இழைய வளர்ப்பு வாழைக் கன்றுகள், கலப்பு முறை தும்பை பாகற்காய் என்பன). UCIARS இன் மேலுமொரு முக்கிய திருப்புமுனை என்னவெனில், விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்துவதன் ஊடாக வறுமையை ஒழிப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சியைப் பலப்படுத்துவதற்காக வாழை, மா மற்றும் காளான் பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்கான தொழில்நுட்ப ரீதியிலான பங்களிப்பாகும். இந்த நிறுவகத்திற்கு 40 ஏக்கர்களைக் கொண்ட பயிர்கள் மற்றும் கால்நடை வளங்கள் மாதிரிகள் சிலவற்றைக் கொண்டுள்ள பயிர் நிலங்கள் காணப்படுவதுடன் அதனூடாக மாணவர்களின் களச் செயன்முறை மற்றும் மாணவர்கள் மற்றும் ஆளணியின் ஆராய்ச்சிகளுக்கு வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகத்தின் (UCIARS) பணிப்பாளர் என்ற வகையில், ‘முதலில் தரம்’ என்ற முன்மாதிரிக் கூற்றைப் பின்பற்றி எமது துணைவேந்தர், முகாமைத்துவ சபை மற்றும் பாரிய அர்ப்பணிப்புடன் பணியாற்றிய ஆளணி அங்கத்தவர்களால் வழங்கப்பட்ட சிறப்பான ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டல்களை நினைவுகூர்ந்து எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகத்தின் (UCIARS) நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக பல்வேறு விதத்தில் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**பேராசிரியர் அசங்க டீ. அம்பிட்டியாவத்த**
பணிப்பாளர்
கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய
விஞ்ஞான கற்கைகள் நிறுவகம்

## உள்ளடக்கம்

**பக்க இல.**

1. மீளாய்வு

1.1 அறிமுகம் 95
1.2 முகாமைத்துவ சபை 96
1.3 கல்விசார் குழு 97
1.4 கணக்காய்வுக்குழு 98
1.5 நிதிசார் குழு 99
1.6 முதலீட்டுக் குழு 100
1.7 நிறுவனக் கட்டமைப்பு 101

2. மொத்த செயற்திறன் 102
2.1 கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்திறன் 107
2.2 UCIARS பண்ணையின் முன்னேற்றம் 121
2.3 நாற்று மேடை / ஆய்வுகூடச் செயற்திறன் 123

3. ஆராய்ச்சிகள் மற்றும் புதிய கண்டுபிடிப்புக்கள் 132

4. பயிற்சி, செயலமர்வுகள் மற்றும் ஆளணி அபிவிருத்தி 135

5. புனரமைப்பு மற்றும் நிர்மாணிப்புக் கருத்திட்டங்கள் 136

6. நிதி 137
6.1 நிதிசார் முன்னேற்றம்
மீண்டெழும் செலவினம் பற்றிய விபரம்
மூலதனச் செலவினம் பற்றிய விபரம்
கருத் திட்டச் செலவினம் பற்றிய விபரம் (உள்நாட்டு / வெளிநாட்டு நிதியுதவி)
நிதிசார் முன்னேற்றம் (ஈட்டிய வருமானம்) பற்றிய விபரம்
நிதிச் செயற்திறன் பகுப்பாய்வு
6.2 உலக வங்கி நிதியுதவித் திட்டங்கள் 139

7. பேண்தகு அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட எதிர்கால இலக்குகள் பற்றிய அறிக்கை 140

8. நிதிக் கூற்றுக்கள் - 2023 143

9. கணக்காய்வறிக்கை - 2023 மற்றும் கணக்காய்வு ஐய வினாக்களுக்கான பதில்கள் 178

**கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகத்தின் இலக்குகள் மற்றும் நோக்கங்கள்**

| இலக்குகள் | | நோக்கங்கள் | மூலோபாயம் |
|---|---|---|---|
| **இலக்கு 1** | தேவையான பண்புகளைக் கொண்ட பட்டதாரிகளைக் உருவாக்குவதனை மேம்படுத்தல் | • தற்போது நிலவுகின்ற பட்டப் பாடநெறிகளுக்கு மற்றும் புதிய பட்டப் பாடநெறிகளுக்கு இணைத்துக் கொள்ளப்படும் அளவை வருடாந்தம் 10% இனால் அதிகரித்தல். | • ஏற்கனவே இருக்கும் பட்டப் பாடநெறிக்கு இரட்டை நுழைவு முறையை அறிமுகப்படுத்தல் |
| | | • தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம் மற்றும் மென் திறன்களை (soft skills) அபிவிருத்தி செய்வதற்காக அதிக வாய்ப்புடனான (10%) பாடத் திட்டங்களை மேம்படுத்துதல் மற்றும் மறுசீரமைத்தல். | • மென் திறன்களை (soft skills) அபிவிருத்தி செய்வதற்கு உதவி புரியும் பாடங்களுடன் பாடத் திட்டங்களை மேம்படுத்துதல் |
| | | • மாணவர் மையக் கற்கை மற்றும் பெறுபேற்றை அடிப்படையாகக்கொண்ட கல்வி மற்றும் மதிப்பீட்டை பலப்படுத்தல். | • தொழில்நுட்பத்தினூடாக பாட விதானங்கள் மற்றும் விரிவுரைகளை பகிரும் முறையை மேம்படுத்தல் |
| | | • மாணவர்கள் மற்றும் பட்டதாரிகளினால் உருவாக்கப்படும் விவசாய தொழில் முயற்சிகளின் அளவை அதிகரித்தல் | • தொழில் முயற்சி மற்றும் விவசாய வர்த்தக அபிவிருத்தி சம்பந்தமாக மாணவர்களின் அறிவை மேம்படுத்தல் |
| | | • கற்கைக்கான வளங்கள் மற்றும் பயிற்சி வசதிகளை அதிகரித்தல் | • மாணவர்களின் திறன்கள் மற்றும் செய்முறை அறிவை மேம்படுத்தல் |
| **இலக்கு 2** | கைத்தொழில் கூட்டாண்மை மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை அதிகரித்தல் | • பயிற்சி மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்புக்காக கைத்தொழிலுடன் பரஸ்பர ரீதியாக பலம்மிக்க தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளல் | • பல்வேறு நிறுவனங்களுக்கிடையில் தொடர்புகளை மேம்படுத்தல் |
| | | • விவசாயக் கைத்தொழில் துறையில் முன்னணியில் இருப்பவர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களை அழைப்புப் பணியாட் குழுவாக நியமித்தல் | • புதிய கண்டுபிடிப்புக்கள் சம்பந்தமான புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளல் |
| | | • தனியார் மற்றும் அரசாங்க கூட்டு தொழில் முயற்சிகளை உருவாக்குதல் (PPP) | • அதற்காக (PPP) வசதிகள் மற்றும் வாய்ப்புக்களை வழங்குதல் |
| **இலக்கு 3** | கல்விசார் சிறப்புக் குறிப்பு மற்றும் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டங்களின் தாக்கத்தை மேம்படுத்தல் | • 2024 ஆம் ஆண்டாகும்போது ஆளணியின் **80%** ஆனோருக்கு பட்டப்பின் படிப்பு பயிற்சியைப் பெற்றுக்கொடுத்தல் | • பட்டப்பின் படிப்புக்கான ஆர்வத்தை ஏற்படுத்தல் மற்றும் அதற்குத் தேவையான வசதிகளை மேம்படுத்தல் |
| | | • 2024 ஆம் ஆண்டாகும்போது கல்விசார் ஆளணியின் **50%** வரை சிரேட்ட ஆளணிக்காக ஆட்சேர்த்துக்கொள்ளல் | • சிரேட்ட ஆளணிக்காக ஆட்சேர்த்துக்கொள்ளல் மற்றும் பதவியுயர்வு சதவீதத்தை அதிகரித்தல் |
| | | • பிராந்திய மையப்படுத்தலுடனான உயர் தாக்கத்துடனான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் சூசிகைப்படுத்தப்பட்ட (indexed journals) சஞ்சிகைகளில் அந்தக் கண்டுபிடிப்புக்களை வெளியிடல். | • உயர் ஆராய்ச்சிக் கலாசாரமொன்றை ஏற்படுத்துவதற்கான வசதிகளை விரிவுபடுத்தல் மற்றும் வலையமைப்புக்களை கட்டியெழுப்புதல் |
| | | • ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புக்களை வர்த்தகமயப்படுத்தல் மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றலுக்கான வசதிகளை வழங்குதல் | • புதிய தொழில்நுட்பம் பற்றிய சிறப்பு அறிவை மேம்படுத்துவதற்காக தேசிய மற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல் |
| | | • தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் ஊடாக பிரஜைகளுக்கு புதிய தொழில்நுட்பம் மற்றும் தகவல்களை வழங்குதல் | • பிரஜைகளுடன் சிறப்பான தொடர்பாடல் தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்கு முடியுமான வகையில் தொழில்நுட்பத்தை |

| | | | |
|---|---|---|---|
| | | | மேம்படுத்தல் |
| **இலக்கு 4** | உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஏனைய வசதிகள் மேம்பாடு | • கல்விசார் மற்றும் நிர்வாகம்சார் உட்கட்டமைப்பு வசதிகளை வருடாந்தம் **20%** இனால் மேம்படுத்தல் மற்றும் விரிவுபடுத்தல்<br>• | • புதிய தொழில்நுட்பத்தினூடாக கல்விசார் வசதிகளை மேம்படுத்தல்<br>• ஆளணி மற்றும் மாணவர்களுக்கான உட்டகட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் |
| | | • ஆராய்ச்சிக்கான வசதிகளை வருடாந்தம் **20%** இனால் மேம்படுத்தல் மற்றும் விரிவுபடுத்தல் | • வசதிகளை மேம்படுத்தல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மீது ஆர்வத்தை ஏற்படுத்தல் |
| | | • 2024 ஆம் ஆண்டாகும்போது மாணவர் மற்றும் ஆளணிக்கான தங்குமிட வசதிகளை **50%** இனால் அதிகரித்தல் | • தங்குமிட வசதிகளை விரிவுபடுத்தல் |
| | | • பசுமை வெளி / பசுமை தொழில்நுட்பத்தை மேம்படுத்தல் | • பசுமை சூழலை மேம்படுத்தல் |
| **இலக்கு 5** | மேம்படுத்தப்பட்ட நிர்வாகம், நிதி முகாமைத்துவம் மற்றும் ஒழுக்கம் | • கல்விசார், நிர்வாகம் மற்றும் தொழில்நுட்ப ஆளணியின் திறன் (ஆற்றல்) விருத்தி | • கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளணியின் திறன்கள் மற்றும் முகாமைத்துவ முறைமையை பலப்படுத்தல்<br>• பதவியுயர்வுகளுக்கான வாய்ப்பை வழங்குதல் |
| | | • 2025 ஆம் ஆண்டாகும்போது முழுமையாக கணனிமயப்படுத்தப்பட்ட ஒன்றிணைந்த முகாமைத்துவ தகவல் கட்டமைப்பொன்றை (MIS) அறிமுகஞ் செய்தல். | • முழுமையான கணனி மயப்படுத்தப்பட்ட ஒன்றிணைந்த முகாமைத்துவ முறைமையுடன் அனைத்துப் பிரிவுகளையும் தொடர்புபடுத்தல் |
| | | • வருடாந்தம் 10% இனால் கணக்காய்வு ஐய வினாக்களைக் குறைத்தல் மற்றும் பொறுப்புக்கூறலை அதிகரித்தல்.<br>• | • நிர்வாக மற்றும் நிதி ஒழுங்குவிதிகள், பெறுகை வழிகாட்டி மற்றும் மூலதன அலுவல்கள் சம்பந்தமாக ஆளணி அங்கத்தவர்களுக்கு அறிவூட்டல். |
| | | • சிக்கனம், வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்தல் **(3Es)** | • வளங்கள் (பௌதிக, மனித மற்றும் நிதி) பகிர்தல், வெளிவாரியாகப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அறிவார்ந்த விளக்கம் |
| | | • பயிற்சியளிப்பு, ஆலோசனை, அறிவுரை, தகவல் சேவைகள், காப்புரிமை அனுமதிப் பத்திரம், உயரடுக்கு நடவுப் பொருள் விற்பனை மற்றும் பண்ணை விற்பனை மூலம் தேறிய வருமானத்தை அதிகரித்தல் | • வருமானம் ஈட்டல் நடவடிக்கைகளுக்காக தேறிய வருமானத்தை அதிகரித்தல் |

# 1. மீளாய்வு

## 1.1 அறிமுகம்

இந்த நிறுவகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2000 ஆம் ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட ஹம்பாந்தோட்டை, வெளிகத்த மாகம்புர விவசாய தொழில்நுட்ப மற்றும் பிரஜைகள் சேவைகள் நிலையமாக முதலில் தாபிக்கப்பட்டது. இந்த நிலையம் 1998 ஆம் ஆண்டு வரை பின்னோக்கிச் செல்வதுடன், பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இக்காலப் பகுதி பூராவும் மக்களுடன் தொடர்பைப் பேணி அவர்களுக்கு தொழில்நுட்பம் மற்றும் அறிவைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் பிராந்தியத்தின் விவசாயம் மற்றும் விவசாயக் கைத்தொழிலின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக ஒத்துழைப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் ஸ்தாபகர், கொழும்பு பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவியுமான பேராசிரியர் ஷனிக்கா ஹிரிம்புரேகம ஆவார்.

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24 ‘அ’ பிரிவு மற்றும் 2008 இன் 02 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவக சட்டத்தின் கீழ் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட உயர் கல்வி நிறுவகமொன்றாக கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகம் (UCIARS) நிறுவப்பட்டது. இந்த சட்டம் 2008 ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி முதல் வலுப்பெறுகின்றது.

கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகம் விவசாய தொழில்நுட்ப இளமாணிப் பட்டப் பாடநெறியை நடாத்தி வருகின்றது. கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகத்தினால் நடாத்தப்படும் இந்த அனைத்துப் பாடநெறிகளும் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் பிரஜைகளிடையே கல்விக்கான வாய்ப்பை உருவாக்குவதில் பிரதான தடையாக இருக்கும் வயது, அவகாசம், காலம் மற்றும் கல்விப் பின்னணி போன்ற காரணிகளைத் தவிர்த்து சிறந்த தொலைக் கல்வி முறையின் கீழ் மேலே குறிப்பிடப்பட்ட கல்விக்கான வாய்ப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்த நிறுவகம் விவசாயத் தொழில்நுட்பம் மற்றும் கிராமிய தொழில்நுட்பம் சம்பந்தமான உயர் கல்வியை பெற்றுக்கொடுப்பதன் ஊடாக தற்போது விவசாயத் தொழில்நுட்பம் மற்றும் விவசாயம் சம்பந்தமாக மக்களிடையே ஊக்குவிப்பு மற்றும் அபிவிருத்தியை மேற்கொண்டுள்ளது. அது விவசாயப் பிரஜைகளின் உயர் கல்வியின் நுழைவாயிலைச் சென்றடைவதற்கான கனவை நனவாக்கி அவர்களுடைய இல்லங்களுக்கே தொலைக்கல்வி முறையின் ஊடாக கல்வியைக் எடுத்துச்சென்று நபர்களிடையே மாற்றங்களை ஏற்படுத்துவதிலும் சமூகத் தேவையை நிறைவேற்றுவதிலும் வெற்றி கண்டுள்ளது. ஆனாலும் அவர்களின் உயர் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான விருப்பம் அல்லது எதிர்பார்ப்பு அவர்களின் தனிப்பட்ட, குடும்ப மற்றும் பொருளாதார பின்னனி போன்ற காரணங்களினால் விடுபடுவதற்கான சந்தர்ப்பங்களைக் காண முடியுமாக இருக்கின்றது. இந்த நிறுவகத்தினால் நடாத்தப்படும் பாடநெறிகளைத் தெரிவு செய்வதற்கான மற்றும் அனுமதி பெறுவதற்கான தகைமைகள் நெகிழ்வுத் தன்மையுடையதாகக் காணப்படுவதனால் கிராமிய ஏழை விவசாயிகள் மேலதிகக் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு, நவீன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அவர்களது கல்வி மற்றும் தொழில் சார்ந்த சமூக அபிலாஷைகளை அடைந்துகொள்வதற்கு உகந்த இடமொன்றாக அமைக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமன்றி இந்த நிறுவகம் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக மிகவும் நியாயமான விலையில் உள்நாட்டு விவசாயிகளுக்கு வழங்குவதற்காக இழைய வளர்ப்பு வாழைக் கன்றுகளை உற்பத்திகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதனூடாக வருமானத்தை உழைக்கின்றது. இந்த நிறுவகம் நாடு பூராவும் பரந்து வாழுகின்ற கிராமிய விவசாயிகளுக்கு இழைய வளர்ப்பு வாழைக் கன்றுகள் உற்பத்தித் தொழில்நுட்பம் சம்பந்தமாக அறிவூட்டுவதற்காக பல செயலமர்வுகள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்தியுள்ளது. அத்துடன், கிராமிய விஞ்ஞானத்துடன் இணைந்து காணப்படும் புதிய தொழில்நுட்பம் சம்பந்தமாக மக்களுக்கு அறிவூட்டுவதற்காக நிறுவனத்தின் வளங்களைப் பயன்படுத்தி தேசிய மட்டத்தில் பல்வேறு கண்காட்சிகளில் பங்கேற்றுள்ளது.

## 1.2 முகாமைத்துவ சபை

2008 இன் 02 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவக சட்டத்தின் 5 ஆம் பிரிவுக்கமைய கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகம் தனது முகாமைத்துவ சபையை அமைத்துள்ளதுடன், மேற் குறித்த சட்டத்தின் 10 ஆம் பிரிவின் திருத்தத்திற்கமைய (2022.05.27 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி ஊடாக வெளியிடப்பட்டுள்ளது) முகாமைத்துவ சபை, நிறுவகத்தின் கல்வி மற்றும் நிறைவேற்று சபையாகவும் இருப்பதுடன் அது கீழ் குறிப்பிடப்படும் அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது:

**அட்டவணை இல. 01: 2023 ஆம் ஆண்டின் முகாமைத்துவ சபையின் விபரம்**

| | | |
|---|---|---|
| **பதவிவழி அடிப்படையில் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள் (சட்டத்திற்கமைய)** | | |
| 1 | **பணிப்பாளர்** - தலைவர் / கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகம் (UCIARS) | பேராசிரியர் ஏ.டீ.அம்பிட்டியாவத்த<br>பணிப்பாளர் /UCIARS (2023.11.01 வரை)<br><br>பேராசிரியர் டீ.எம்.சீ.சீ.குணதிலக்க - பதில் கடமை பணிப்பாளர் /UCIARS (02.11.2023 முதல் 19.12.2023 வரை)<br>பணிப்பாளர் /UCIARS ( 20.12.2023 ஆம் திகதி முதல்) |
| 2 | பிரதிப் பணிப்பாளர் | நிறுவகத்திற்கு பிரதிப் பணிப்பாளர் பதவியொன்று அங்கீகரிக்கப்படவில்லை |
| 3 | உயர் கல்வி அமைச்சின் செயலாளர் அல்லது விடயத்திற்குப் பொறுப்பான செயலாளர் அல்லது அந்த அமைச்சின் உயர் கல்வி விடயத்திற்குப் பொறுப்பாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அங்கத்தவர் ஒருவர் | திருமதி ரீ.கே.டப்ளியூ.பீ.பிரேமரத்ன<br>உதவிப் பணிப்பாளர் (மாணவர் கடன் திட்டம்), கல்வி அமைச்சு. |
| 4 | கமத்தொழில் அமைச்சின் செயலாளர் அல்லது அந்த அமைச்சினால் பெயர் குறிப்பிடப்படும் அங்கத்தவர் ஒருவர் | கலாநிதி ஈ.ஆர்எஸ்.பீ.எதிரிமான்ன<br>மேலதிக செயலாளர் (விவசாய - தொழில்நுட்பம்), கமத்தொழில் அமைச்சு |
| 5 | நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் ஒருவர் | திருமதி டீ.எம்.எஸ்.டி சில்வா, பணிப்பாளர் (கடமை நிறைவேற்றல்), முகாமைத்துவ சேவைகள் திணைக்களம், நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு |
| 6 | கொழும்புப் விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி / கொழும்பு பல்கலைக்கழகம் | பேராசிரியர் டீ.யூ.ஜே.சொன்னாதர |
| 7 | கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதி | பேராசிரியர் ஆர்யூ.கே.பியதாச |
| 8 | நிறுவகத்தின் கற்கைப் பிரிவுகளின் தலைவர் | கலாநிதி (திருமதி) என்.பீ.விதானபதிரண விவசாய தொழில்நுட்ப பிரிவு / UCIARS<br><br>பேராசிரியர் டீ.எம்.சீ.சீ.குணதிலக்க, உணவுத் தொழில்நுட்பப் பிரிவு /UCIARS |
| 9 | கொழும்புப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் தாவர விஞ்ஞான பிரிவின் தலைவர் அல்லது அல்லது துணைவேந்தரின் இணக்கப்பாட்டுடனான பெயர் குறிப்பிடல் | கலாநிதி (திருமதி) எச்.கத்ரிஆரச்சி |
| **ஏனைய அங்கத்தவர்கள் (சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம்)** | | |
| 1 | விவசாய தொழில்நுட்பம் மற்றும் விவசாய வர்த்தகக் கைத்தொழிலை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக | பேராசிரியர் பீ.எம்.ஏ.எஸ்.கருணாரத்ன, பீடாதிபதி / விவசாய பீடம், சப்ரகமுவ பல்கலைக்கழகம் |

| | | |
|---|---|---|
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் நியமிக்கப்படும் இரண்டு | திரு.நிரன்ஜன் கோலித்த டி சில்வா, சிரேஷ்ட சட்டத்தரணி |
| 2 | நிர்வாக சபை அங்கத்தவர்களிடையே நியமிக்கப்படும் இரண்டு அங்கத்தவர்கள் | பேராசிரியர் எஸ்.கருணாரத்ன<br>திரு.மகிந்த மடிஹஹேவா |
| 3 | ஹம்பந்தோட்டை மாவட்டச் செயலாளர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் ஒருவர் | திரு. எச்.பீ.சுமணசேக்கர |
| 4 | கல்விசார் ஆலோசனை குழுவின் அங்கத்தவர்களில் இருந்து நியமிக்கப்படும் ஒருவர் | செல்வி எஸ்.ஏ.பீ.நெல்கா<br>பாடநெறி ஒருங்கிணைப்பாளர்/UCIARS |
| 5 | துணைவேந்தரின் பரிந்துரையின் அடிப்படையில் சபையினால் நியமிக்கப்பட்ட விவசாயத்துறை நிபுணர்கள் இருவர் | பேராசிரியர் எஸ்.சுபசிங்க |
| **முகாமைத்துவ சபையின் செயலாளர்** | | |
| சிரேஷ்ட உதவிப் பதிவாளர் /UCIARS | | திருமதி எஸ்.ஏ.எஸ். பிரியதர்சனி |

கல்வி மற்றும் நிர்வாக விடயங்கள் சம்பந்தமாக மீளாய்வு செய்வதற்காக நிறுவகத்தின் முகாமைத்துவ சபை இந்த ஆண்டில் முறையாகக் கூடியுள்ளது. முகாமைத்துவ சபை 2023 இல் பன்னிரெண்டு (12) தடவைகள் கூடியுள்ளது.

### 1.3 ஒகல்விசார் ஆலோசனை சபை

நிறுவகத்தின் கல்வி சார்ந்த விடயங்கள் தொடர்பாக கண்டறிவதற்கு மற்றும் அது தொடர்பாக முகாமைத்துவ சபைக்கு பரிந்துரைகளை வழங்குவதற்காக 2021 ஆம் ஆண்டில் கல்விசார் ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. 2008 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவக சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவுக்கமைய நிறுவப்பட்டுள்ள அக்குழு கீழ் குறிப்பிடப்படும் அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது;

**அட்டவணை இல. 02: 2023 ஆம் ஆண்டின் கல்விசார் ஆலோசனைக் குழுவின் விபரம்**

| | | |
|---|---|---|
| 1 | **பணிப்பாளர்** - தலைவர் / கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகம் (UCIARS) | பேராசிரியர் ஏ.டீ.அம்பிட்டியாவத்த<br>பணிப்பாளர் /UCIARS (2023.11.01 வரை)<br>பேராசிரியர் டீ.எம்.சீ.சீ.குணதிலக்க - பதில் கடமை பணிப்பாளர் /UCIARS (02.11.2023 முதல் 19.12.2023 வரை)<br>பணிப்பாளர் /UCIARS ( 20.12.2023 ஆம் திகதி முதல்) |
| 2 | கற்கைப் பிரிவுகளின் தலைவர் | கலாநிதி என்.பீ.விதானபதிரண விவசாய தொழில்நுட்ப கற்கைப் பிரிவுத் தலைவர்<br>பேராசிரியர் டீ.எம்.சீ.சீ.குணதிலக்க, உணவுத் தொழில்நுட்பப் பிரிவு /UCIARS |
| 3 | விவசாயம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்களின் பிரதிநிதிகளாக அந்த அமைச்சுக்களின் செயலாளர்களால் பெயர் குறிப்பிடப்படும் இருவர் | கலாநிதி ஈ.ஆர்.எஸ்.பீ.எதிரிமான்ன மேலதிக செயலாளர் (விவசாய தொழில்நுட்பம்), கமத்தொழில் அமைச்சு<br>நீர்ப்பாசன அமைச்சினால் பிரதிநிதியொருவர் பெயர்குறிப்பிடப்படவில்லை. |
| 4 | கற்கைப் பிரிவுகளால் பெயர் குறிப்பிடப்படும் அங்கத்தவர் | - |
| 5 | கற்கை பாடநெறிகளின் ஒருங்கிணைப்பாளர்கள் | செல்வி எஸ்.ஏ.பீ.நெல்கா<br>பாடநெறி ஒருங்கிணைப்பாளர்/UCIARS<br>செல்வி எஸ்.எல்.நவரத்ன, பாடநெறி ஒருங்கிணைப்பாளர் / UCIARS |

| | | |
|---|---|---|
| 6 | கற்கைப் பிரிவுகளின் சிரேஷ்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள் மற்றும் துணைப் பேராசிரியர்கள் | - |
| 7 | கற்பித்தலில் ஈடுபட்டுள்ள நிறுவகத்தின் நிரந்தர ஊழியர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மேலே (6) இற்குள் வராத உறுப்பினர்கள். | திரு. எல்.எம்.ரிப்னாஸ் - விரிவுரையாளர் (தகுதிகாண்)<br>திருமதி கே.ஜீ.கெட்டிபேஆரச்சி - விரிவுரையாளர் (தகுதிகாண்) |
| **கல்விசார் ஆலோசனை குழுவின் செயலாளர** | | |
| சிரேஷ்ட உதவிப் பதிவாளர், விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகம் | | திருமதி எஸ்.ஏ.எஸ். பிரியதர்சனி |

கல்வி சார்ந்த விடயங்கள் சம்பந்தமாக மீளாய்வு செய்வதற்காக நிறுவகத்தின் கல்விசார் ஆலோசனைக் குழு இந்த ஆண்டில் முறையாகக் கூடியுள்ளது. முகாமைத்துவ சபை 2023 இல் பன்னிரெண்டு (12) தடவைகள் கூடியுள்ளது.

## 1.4 கணக்காய்வுக் குழு

நிறுவகத்தின் கணக்காய்வுக்குழு என்பது, உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் வெளிவாரியான (அரசாங்க) கணக்காய்வு அறிக்கைகளின் விடயங்கள் சம்பந்தமாக தீர்மானம் எடுப்பதற்காக முகாமைத்துவ சபைக்கு ஒத்துழைப்பு வழங்கும் உப குழுவொன்றாகும். இக்குழுவின் தலைவராக முகாமைத்துவ சபையினால் பெயர் குறிப்பிடப்படும் ஒருவர் கடமையாற்றுவார். பணிப்பாளர், விவசாய – தொழில்நுட்பப் பிரிவின் தலைவர், உதவி நிதிப் பொறுப்பாளர் மற்றும் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் ஆகியோர் குழுவின் அங்கத்தவர்களாக இருப்பதுடன், கூட்டங்களுக்கான அழைப்பாளராக கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர் நடவடிக்கை மேற்கொள்வார். கணக்காய்வுக் குழுவின் கூட்டங்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் பிரதிநிதிகளுக்கு மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உள்ளக கணக்காய்வாளருக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

நிறுவகத்தின் கணக்காய்வுக் குழு, சகல ஆண்டுகளிலும் காலாண்டு ரீதியாகக் கூடியுள்ளது. கணக்காய்வுக் குழு 2023 இல் இரண்டு (02) தடவைகள் கூடியுள்ளது.

2023 இல் கணக்காய்வுக் குழு கீழ் குறிப்பிடப்படும் அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது:

**அட்டவணை இல. 03: 2023 ஆம் ஆண்டின் கணக்காய்வுக் குழுவின் விபரம்**

| | | |
|---|---|---|
| 1 | தலைவர் / முகாமைத்துவ சபையின் பரிந்துரை | திரு.என்.கே. டி சில்வா, சட்டத்தரணி, முகாமைத்துவ சபையின் அங்கத்தவர் / திருமதி டீ.எம்.எஸ். டி சில்வா திறைசேரிப் பிரதிநிதி |
| 2 | முகாமைத்துவ சபையினால் பெயர் குறிப்பிடப்பட்ட ஏனைய 02 அங்கத்தவர்கள் | கலாநிதி ஈ.ஆர்.எஸ்.பீ.எதிரிமான்ன மேலதிக செயலாளர் (விவசாய தொழில்நுட்பம்), கமத்தொழில் அமைச்சு<br>பேராசிரியர் டீ.யூ.ஜே.சொன்னாதர விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி / கொழும்புப் பல்கலைக்கழகம் |
| 3 | திறைசேரியின் பிரதிநிதி | திரு.டப்ளியு.ஜீ.என். அபேவிக்ரம, தலைமைக் கணக்காளர், மாவட்ட செயலகம்/ ஹம்பாந்தோட்டை<br>திருமதி டீ.எம்.எஸ். டி சில்வா திறைசேரிப் பிரதிநிதி |
| 4 | கணக்காய்வுத் திணைக்களத்தின் பிரதிநிதி | திரு. டப்ளியு.ஏ.ஏ.அனுருத்த / திரு. எஸ்.பீ.பிரத்தாபகே கணக்காய்வு அத்தியட்சகர், அரசாங்க கணக்காய்வுப் பிரிவு, மாவட்ட செயலகம்/ ஹம்பாந்தோட்டை |

| | | |
|---|---|---|
| 5 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதிநிதி | திரு.ஜானக்க போகமுவ<br>உள்ளக கணக்காய்வாளர் / பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு |
| 6 | கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகத்தின் பிரதிநிதிகள் | பேராசிரியர் ஏ.டீ.அம்பிட்டியவத்த,<br>பணிப்பாளர் /UCIARS (2022.03.02 முதல்)<br>பேராசிரியர் டீ.எம்.சீ.சீ.குணதிலக்க /UCIARS<br>கலாநிதி (திருமதி) என்.பீ.விதானபதிரண, விவசாய தொழில்நுட்ப கற்கைப் பிரிவின் பிரதானி<br>திருமதி ஏ.டீ.பீ. டி சொய்சா<br>உதவி நிதிப் பொறுப்பாளர் / UCIARS<br>திருமதி எஸ்.ஏ.எஸ். பிரியதர்சனி, சிரேஷ்ட உதவிப் பதிவாளர் /UCIARS |
| 7 | கணக்காய்வுக்குழுவின் செயலாளர் | திரு. கே.ஈ.டப்ளியூ.ஜயசிரி / திரு. எஸ்.பீ.ஜீ.நிஹால்<br>சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர், கொழும்புப் பல்கலைக்கழகம் |

## 1.5 நிதிசார் குழு

நிதிசார் குழு என்பது, நிறுவனத்தின் நிதி சார்ந்த செயற்பாடுகளை முறைப்படுத்துவதற்காக முகாமைத்துவ சபைக்கு பரிநிதுரைகளை முன்வைப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள ஆலோசனை உப குழுவொன்றாகும். நிறுவகத்திற்கான நிதிசார் குழுவை நியமிப்பதற்கு 2008 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவக சட்டத்தில் ஏற்பாடுகள் இல்லையென்பதனால், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2021.10.06 ஆம் திகதிய, 01/2021 ஆம் இலக்க உள்ளகக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2022.05.27 ஆம் திகதி நடைபெற்ற முகாமைத்துவ சபையின் 96 ஆவது கூட்டத்தின்போது UCIARS இற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அங்கத்தவர்களைக் கொண்ட முகாமைத்துவ சபையின் உப குழுவொன்றாக நிதிசார் குழுவொன்றை அமைப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (அங்கத்தவர்களின் பதவிக்காலம் நியமிக்கப்பட்ட திகதி முதல் மூன்று வருட காலமாகும்). நிர்வாக சபை, 2022.07.20 ஆம் திகதி நடைபெற்ற 597 ஆவது கூட்டத்தின்போது நிதிக்குழுவை அமைத்தல் தொடர்பான முகாமைத்துவ சபையின் தீர்மானத்தை மேலும் பரிந்துரை செய்ததுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, 2022.10.06 ஆம் திகதி நடைபெற்ற 1087 ஆவது கூட்டத்தின்போது அதற்கான அங்கீகாரத்தை வழங்கியது.

**அட்டவணை இல. 04: 2023 ஆம் ஆண்டின் நிதிசார் குழுவின் விபரம்**

| | | |
|---|---|---|
| 1 | பணிப்பாளர் - UCIARS (தலைவர்) | பேராசிரியர் ஏ.டீ.அம்பிட்டியாவத்த<br>பணிப்பாளர் /UCIARS (2023.11.01 வரை)<br>பேராசிரியர் டீ.எம்.சீ.சீ.குணதிலக்க - பதில் கடமை பணிப்பாளர் /UCIARS (02.11.2023 முதல் 19.12.2023 வரை)<br>பணிப்பாளர் /UCIARS ( 20.12.2023 ஆம் திகதி முதல்) |
| 2 | முகாமைத்துவ சபை அங்கத்தவர்களிடையே பெயர் குறிப்பிடப்பட்ட 02 அங்கத்தவர்கள் (ஏற்புடையதாயின் நிதியியல் பற்றிய நிபுணத்துவ அறிவைக்கொண்டுள்ள ஒரு பிரதிநிதியுடன்) | 1.திரு. எம்.மடிஹஹேவா<br>2.திருமதி ரீ.கே.டப்ளியு.ரீ.பீ.பிரேமரத்ன, கல்வி அமைச்சு<br>3. டீ.எம்.எஸ். டி சில்வா |
| 3 | நிறுவகத்தின் அனைத்து கற்கைப் பிரிவுகளின் தலைவர்கள் | கலாநிதி என்.பீ.விதானபதிரண, விவசாய தொழில்நுட்ப கற்கைப் பிரிவின் பிரதானி<br>பேராசிரியர் டீ.எம்.சீ.சீ.குணதிலக்க,<br>உணவுத் தொழில்நுட்பப் பிரிவின் பிரதானி |

| | | |
|---|---|---|
| 4 | நிறுவகத்தின் பிரதிப் பதிவாளர்/சிரேஷ்ட உதவிப் பதிவாளர் /உதவிப் பதிவாளர் (ஏற்புடைய பிரகாரம்) - அங்கத்தவர் | திருமதி எஸ்.ஏ.எஸ். பிரியதர்சனி, சிரேஷ்ட உதவிப் பதிவாளர் |
| 5 | நிறுவகத்தின் பிரதி நிதிப் பொறுப்பாளர் /சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர் /உதவி நிதிப் பொறுப்பாளர் (ஏற்புடைய பிரகாரம்) - அங்கத்தவர் மற்றும் அழைப்பாளர் | திருமதி ஏ.டீ.பீ. டி சொய்சா/ கே.சுனில் உதவி நிதிப் பொறுப்பாளர் |
| 6 | நிறுவகத்திற்கு இணைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தின் பிரதி உள்ளக கணக்காய்வாளர்/ சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர்/ உதவிக் கணக்காய்வாளர் - கண்காணிப்பாளர் | திரு. கே.ஈ.டப்ளியூ.ஜயசிரி / திரு. எஸ்.பீ.ஜீ.நிஹால் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர், கொழும்புப் பல்கலைக்கழகம் |
| 8 | கண்காணிப்பாளராக கொழும்புப் பல்கலைக்கழக நிதிப் பொறுப்பாளரின் பிரதிநிதி | திருமதி கே.எஸ்.ரீ.எஸ்.ஜயசூரிய / திருமதி ஜே.ரீ.எல்.தர்மசேன நிதிப்பொறுப்பாளர், கொழும்புப் பல்கலைக்கழகம் |

நிறுவகத்தின் நிதிக் குழுவின் முதலாவது கூட்டம் 2022.09.13 ஆம் திகதி நடாத்தப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் மூன்று (03) தடவைகள் குழு கூடியுள்ளது.

## 1.6 முதலீட்டுக் குழு

நிறுவகத்தின் முதலீடுகளிலிருந்து உச்சளவு அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகத்திற்கு கீழ் குறிப்பிடப்படும் அங்கத்தவர்களைக் கொண்ட முதலீட்டுக் குழுவொன்றை அமைப்பதற்கு முகாமைத்துவக் குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

**அட்டவணை இல. 05: 2023 ஆம் ஆண்டின் முதலீட்டுக் குழுவின் விபரம்**

| | | |
|---|---|---|
| 1 | பணிப்பாளர் - UCIARS (தலைவர்) | பேராசிரியர் ஏ.டீ.அம்பிட்டியாவத்த<br>பணிப்பாளர் /UCIARS (2023.11.01 வரை)<br>பேராசிரியர் டீ.எம்.சீ.சீ.குணதிலக்க - பதில் கடமை பணிப்பாளர் /UCIARS (02.11.2023 முதல் 19.12.2023 வரை)<br>பணிப்பாளர் /UCIARS ( 20.12.2023 ஆம் திகதி முதல்) |
| 2 | முகாமைத்துவ சபையினால் பெயர் குறிப்பிடப்பட்ட அங்கத்தவர் | திரு. எம்.மடிஹஹேவா, முகாமைத்துவ சபையின் பிரதிநிதி (நிர்வாக சபையினால் பெயர் குறிப்பிடப்பட்ட) |
| 3 | கொழும்புப் பல்கலைக்கழகப் பதிவாளரின் பிரதிநிதி | திருமதி ரீ.டீ.டீ.பத்திரனகே, பிரதிப் பதிவாளர், விஞ்ஞான பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம் |
| 4 | கொழும்புப் பல்கலைக்கழக நிதிப் பொறுப்பாளரின் பிரதிநிதி | திரு.ஜீ.எச்.காமினி, பிரதி நிதிப் பொறுப்பாளர், நிதிப் பிரிவு, கொழும்புப் பல்கலைக்கழகம்.<br>திருமதி எஸ்.ஏ.என்.டீ.அபேசுந்தர, பிரதி நிதிப் பொறுப்பாளர் /MFU, கொழும்புப் பல்கலைக்கழகம். |
| 5 | நிறுவகத்தின் பிரதி நிதிப் பொறுப்பாளர் /சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர் / உதவி நிதிப் பொறுப்பாளர் (ஏற்புடைய பிரகாரம்) - அங்கத்தவர் மற்றும் அழைப்பாளர் | திருமதி ஏ.டீ.பீ. டி சொய்சா,<br>உதவி நிதிப் பொறுப்பாளர் |

நிறுவகத்தின் முதலீட்டுக் குழுவின் முதலாவது கூட்டம் 2022.09.28 ஆம் திகதி நடாத்தப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் ஒரு (01) தடவை குழு கூடியுள்ளது.

## 1.7 நிறுவனக் கட்டமைப்பு




**விளக்கப்படம் 1 – நிறுவனக் கட்டமைப்பு**

## 2. மொத்த செயற்திறன்

நிறுவகத்தின் பிரதான பணி என்னவெனில் விவசாயத் தொழில்நுட்ப பட்டப் பாடநெறியை நடைமுறைப்படுத்தல், இழைய வளர்ப்பு வாழைக் கன்று உற்பத்தி பண்ணை உற்பத்திகளில் ஈடுபடுவதாகும்.

2023 ஆம் ஆண்டில் இந்த நிறுவகத்தின் விவசாய தொழில்நுட்ப கற்கைப் பிரிவு ஊடாக கல்விசார் நடவடிக்கைகளும் ஆய்வுகூடத்தைப் பயன்படுத்தி இழைய வளர்ப்பு வாழைக் கன்று உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது.

69 அங்கத்தவர்களைக் கொண்ட ஆளணியின் ஒத்துழைப்புடன் நிறுவனம் அதன் இலக்கை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன், ஆளணியானது 6% நிர்வாகம், 12% கல்விசார் / கல்விசார் உதவி (நிரந்தரம்), 13% கல்விசார் (பணி ஒப்படை /தற்காலிகம்), 69% கல்வி சாரா (நிரந்தர / பணி ஒப்படை) என்ற ரீதியில் அமைந்துள்ளது.(அட்டவணை 06 மற்றும் உரு. இல. 01) 2023.12.31 ஆம் திகதியன்று UCIARS இன் அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் மற்றும் தற்போதைய ஆளணி பற்றிய விபரம் அட்டவணை 07 ஊடாக விபரிக்கப்படுகின்றது.

| ஆளணியின் வகைப்படுத்தல் | ஊழியர் எண்ணிக்கை |
|---|---|
| நிர்வாகம் | 04 |
| கல்விசார் / கல்விசார் உதவி (நிரந்தரம்) | 08 |
| கல்விசார் (பணி ஒப்படை /தற்காலிகம்) | 09 |
| கல்வி சாரா | 48 |
| **மொத்த ஆளணி** | **69** |




**உரு. இல. 01 : 2023 இல் நிறுவகத்தின் ஆளணி**

**அட்டவணை - 07 : 2023.12.31 திகதியன்று நிறுவகத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் மற்றும் நிலவுகின்ற பதவிகள் பற்றிய விபரம்**

| பதவிப் பெயர் | | சேவை வகுதி | தரம் | சம்பளக் குறியீடு | சேவை மட்டம் | மு.சே.தி. அங்கீகரித்துள்ள பதவிகளின் எண்ணிக்கை | | | தற்போது நிலவும் பதவிகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | நிரந்தரம் | ஒப்பந்த வழமையான | நிரந்தரம் | ஒப்பந்த வழமையான | நிரந்தரம் | ஒப்பந்த அடிப்படை | நிரந்தரம் |
| 1 | பணிப்பாளர் | கல்விசார் | | U-AC 5 | சிரேஷ்ட | 1 | | | 0 | | | |
| 2 | பேராசிரியர் | கல்விசார் | | U-AC 5 | சிரேஷ்ட | 8 | | | 1 | | | |
| 3 | துணை பேராசிரியர் | கல்விசார் | | U-AC 4 | சிரேஷ்ட | | | | 0 | | | |
| 4 | சிரேஷ்ட விரிவுரையாளர் /விரிவுரையாளர் / விரிவுரையாளர் (தகுதிகாண்) | கல்விசார் | | U-AC 3 | சிரேஷ்ட | | | | 7 | | | |
| 5 | ஆராய்ச்சி உதவியாளர் | கல்விசார் உதவி | | U-AS 1 | 3 ஆம் நிலை | 1 | | | 1 | | | |
| 6 | தற்காலிக செய்முறை விளக்குநர் | ஒப்பந்த | | U-AC 1 (ජ්‍යෙෂ්ඨ) | 3 ஆம் நிலை | | 4 | | | 4 | | |
| 7 | சிரேஷ்ட உதவிப் பதிவாளர் | UA & FS | II/I | U-EX 2 | சிரேஷ்ட | 1 | | | 1 | | | |
| 8 | உதவி நிதிப் பொறுப்பாளர் | UA & FS | II/I | U-EX 1 | 3 ஆம் நிலை | 1 | | | 1 | | | |
| 9 | பண்ணை முகாமையாளர் | Dept. | II/I | U-EX 1 | 3 ஆம் நிலை | 1 | | | 0 | | | |
| 10 | உப விடுதி நிர்வாகி | Dept. | III/II/I | U-MN 3 | 2 ஆம் நிலை | 1 | | | 1 | | | |
| 11 | தொழில்நுட்ப அலுவலர் (தகவல் தொழில்நுட்பம்) | UTS | III/II/I | U-MT 1 | 2 ஆம் நிலை | 1 | | | 0 | | | |
| 12 | தொழில்நுட்ப அலுவலர் | UTS | III/II/I | U-MT 1 | 2 ஆம் நிலை | 2 | | | 0 | | | |
| 13 | கள நிர்வாகி | | III/II/I | U-MT 1 | 2 ஆம் நிலை | 1 | | | 1 | | | |
| 14 | முகாமைத்துவ உதவியாளர் | UMAS | III/II/I | U-MN 1 | 2 ஆம் நிலை | 7 | | | 4 | | | |
| 15 | முகாமைத்துவ உதவியாளர் (களஞ்சியசாலை) | UMAS | III/II/I | U-MN 1 | 2 ஆம் நிலை | 2 | | | 1 | | | |
| 16 | முகாமைத்துவ உதவியாளர் (கணக்குப் பதிவு) | UMAS | III/II/I | U-MN 1 | 2 ஆம் நிலை | 1 | | | 1 | | | |
| 18 | சாரதி | UDS | III/II/I/Spl | U-PL 3 | ஆரம்ப நிலை | 2 | | | 2 | | | |
| 19 | மின்சார தொழில்நுட்பவியலாளர் | Dept. | III/II/I/Spl | U-PL 3 | ஆரம்ப நிலை | 1 | | | 0 | | | |
| 20 | ஆராய்ச்சி உதவியாளர் | Dept. | III/II/I/Spl | U-PL 2 | ஆரம்ப நிலை | 26 | | | 21 | | | |
| 21 | உளவு இயந்திர இயக்குனர் | Dept. | III/II/I/Spl | U-PL 2 | ஆரம்ப நிலை | 1 | | | 0 | | | |
| 22 | நாற்றுமேடை பொறுப்பாளர் | Dept. | III/II/I/Spl | U-PL 1 | ஆரம்ப நிலை | 2 | | | 0 | | | |
| 23 | பணி உதவியாளர் | UWAS | III/II/I/Spl | U-PL 1 | ஆரம்ப நிலை | 18 | | | 14 | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ** | **பணி ஒப்படை அடிப்படையில் தற்போது பணியாற்றும் ஊழியர்கள் (அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் அல்லாத)** | | | | | | | | | | | |
| | பாடநெறி ஒருங்கிணைப்பாளர் | | | | | | | | | | | 3 |
| | தற்காலிக விரிவுரையாளர் | | | | | | | | | | | 2 |
| | பண்ணை முகாமையாளர் | | | | | | | | | | | 1 |
| | கணனி இயக்குநர் மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | | | | | | | | | | | 1 |
| | தகவல் தொழில்நுட்ப அலுவலர் (பகுதி நேர) | | | | | | | | | | | 1 |
| **மொத்தம்** | | | | | | **78** | **4** | **0** | **57** | **4** | **0** | **8** |

**அட்டவணை - 08 : 2023.12.31 ஆம் திகதியன்று நிறுவகத்தின் நிர்வாக ஆளணி**

| இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | பேராசிரியர் ஏ.டீ.அம்பிட்டியவத்த,<br>பேராசிரியர் டீ.எம்.சீ.சீ.குணதிலக்க | பணிப்பாளர் (2023.11.01 வரை)<br>பதில் கடமை பணிப்பாளர் (22023.11.02 முதல் 2023.12.19 வரை) |
| 2 | திருமதி எஸ்.ஏ.எஸ். பிரியதர்சனி | சிரேஷ்ட உதவிப் பதிவாளர் |
| 3 | ஏ.டீ.பீ டி சொய்சா | உதவி நிதிப் பொறுப்பாளர் |
| 4 | டீ.கே.ஐ.பீ.குமார | பண்ணை முகாமையாளர் (2023.08.21 முதல்) |

**அட்டவணை - 09: 2023.12.31 ஆம் திகதியன்று நிறுவகத்தின் நிர்வாகம் / நிதிப் பிரவின் கல்விசாரா ஆளணி**

**நிர்வாகப் பிரிவு**

| இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | கே.ஜீ.எம்.சமரவிக்ரம | உப மேற்பார்வையாளர் (முழு நேரம்) |
| 2 | திருமதி டப்.கே.கே.ராஜிகா நிலங்கனி | முகாமைத்துவ உதவியாளர் தரம் III |
| 3 | திரு. ஆர்.வீ.பீ.என்.பீ.குமார | முகாமைத்துவ உதவியாளர் தரம் III |
| 4 | திருமதி ஆர்.ஏ.எம்.தில்ஹாரி | ஆய்வுகூட உதவியாளர் |
| 5 | திரு. பீ.பி.தர்ஷன | பணி உதவியாளர் தரம் III |
| 6 | திரு.கே.எஸ்.ஆர்.சம்பத் | பணி உதவியாளர் தரம் III |
| 7 | திரு.டப்ளியு.எம்.சமிந்த | பணி உதவியாளர் தரம் III |
| 8 | திரு.பீ.ஜீ.எஸ்.குமார | ஆய்வுகூட உதவியாளர் தரம் III |
| 9 | திரு.எஸ்.வீ.உபாலி | சாரதி தரம் II |
| 10 | திரு.டப்ளியூ.டப்ளியூ.கே.பிரியங்கர | சாரதி தரம் II |

**நிதிப் பிரிவு**

| இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | திருமதி யூ.எம்.ஏ.ஏ.எம். டி சில்வா | முகாமைத்துவ உதவியாளர் தரம் III |
| 2 | திரு.ஜே.ஏ.யூ.எஸ்.ஜயவர்தன | முகாமைத்துவ உதவியாளர் தரம் III (களஞ்சியசாலை) |
| 3 | திரு.எம்.ஜீ.ஜே.பீ.எஸ்.சந்தருவன் | பணி உதவியாளர் தரம் III |
| 4 | திருமதி கே.டீ.சீ.ஆரியசேன | முகாமைத்துவ உதவியாளர் தரம் I |
| 5 | செல்வி என்.ஏ.ஐ.தில்ஹாரா | முகாமைத்துவ உதவியாளர் (கணக்குப் பதிவு) |
| 6 | டப்ளியூ.எச்.யூ.கௌஷல்யா | ஆய்வுகூட உதவியாளர் தரம் III |

**2023 ஆம் ஆண்டில் கொழும்புப் பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கை நிறுவகத்தின் விசேட நிகழ்வுகள் / நிகழ்ச்சித் திட்டங்கள்**

**1. முழு நேர ஐந்தாவது (5 ஆவது) பணிப்பாளர் கடமைகளைப் பொறுப்பேற்றல்**

UCIARS இன் முன்னாள் பணிப்பாளரான பேராசிரியர் ஏ.டீ.அம்பிட்டியவத்த அவர்களின் பதவிக் காலம் நிறைவடைந்ததன் பின்னர் புதிய பணிப்பாளராக பேராசிரியர் திரு. டீ.எம்.சீ.சீ. குணதிலக்க அவர்கள் ஐந்தாவது (முழு நேர) பணிப்பாளராக 2023 திசெம்பர் மாதம் 20 ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்றார். இவர் UCIARS இன் உணவுத் தொழில்நுட்ப பிரிவின் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பம் பற்றிய பேராசிரியராவார்.

**2. உணவுத் தொழில்நுட்பப் பிரிவை அமைத்தல்**

கொழும்புப் பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கை நிறுவகம் (UCIARS) 2023 ஜனவரி 31 ஆம் திகதி புதிய உணவுத் தொழில்நுட்பப் பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டதையடுத்து நிறுவகத்தின் கல்விசார் பிரிவில் முக்கிய கட்டமொன்றை அடைந்தது. இந்த நிகழ்வில் துணைவேந்தர், சிரேஷ்ட பேராசிரியர் திரு. ஏ.டீ.கருணாரத்ன அவர்கள் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன் (UCIARS) இன் பணிப்பாளர் பேராசிரியர் ஏ.டீ.அம்பிட்டியவத்த, பிரிவுத் தலைவர்கள், கல்விசார் ஆளணி, சிரேஷ்ட உதவிப் பதிவாளர், உதவி நிதிப் பொறுப்பாளர் மற்றும் கல்வி சாரா ஆளணி அங்கத்தவர்கள் இந்த நிகழ்வில் பங்குபற்றினர்.

**3. ஆங்கில மொழி வள நிலையத்தை திறத்தல்**

UCIARS இன் AHEAD - ELTA ELSE திட்டத்தின் ஒரு பகுதியாக நிறுவப்பட்ட ஆங்கில மொழி வள நிலையத்தை ஆரம்பித்துவைக்கும் வைபவம் 2023 ஜூலை 26 ஆம் திகதி நடைபெற்றது.இந்த முக்கியமான நிகழ்வு ஆங்கில மொழித் திறனை மேம்படுத்துவதற்கான முயற்சிகளில் ஒரு சிறப்புத் திருப்புமுனையாகும். பயன்மிக்க மொழிக் கற்றலுக்கான வசதிகளை வழங்குவதற்கான அத்தியாவசிய வளங்களுடன் இந்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இது மொத்தம் 25 கணினிகளைக் கொண்டுள்ளதுடன், மாணவர்கள் மற்றும் கற்பவர்களுக்கு இடைத்தொடர்பு மொழிச் செயற்பாடுகள் மற்றும் பயிற்சிகளில் ஈடுபடுவதற்கு ஏராளமான வாய்ப்புகளை வழங்குகிறது. இது தவிர, நிலையத்தின் வேர்ட்ஸ்வொர்த் (Wordsworth) ஆங்கில மொழி கற்றல் மென்பொருள், புதிய டிஜிட்டல் பாடங்கள் மற்றும் பயிற்சிகள் மூலம் மொழித் திறனை மேம்படுத்த வடிவமைக்கப்பட்ட ஒரு கருவியாகும். நவீன கல்வித் தேவைகளுக்கு ஏற்ப, இந்த நிலையம் WiFi இணைப்பையும் வழங்குகிறது. மாணவர்களுக்கு தங்களுடைய ஆங்கில மொழியைக் கற்றுக்கொள்ளும் பயணத்திற்கு உதவுவதற்கான தொடர்புடைய ஏராளமான வளங்கள் மற்றும் பொருட்களுக்கான அணுகலை உறுதி செய்கிறது. இது தவிர, சிறப்பான கற்றல் சூழலை உருவாக்குகின்ற ஏனைய வசதிகளும் இங்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த நிலையமானது மொழித்திறனை வளர்ப்பதிலும், தனிநபர்களை வலுவூட்டுவதிலும் கல்வியில் சிறந்து விளங்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**4. தொடர்பாடல் நிலையத்தை திறத்தல்**

2023 ஜூலை 26 ஆம் திகதி தகவல் தொடர்பாடல் நிலையத்தை அமைத்து திறந்து வைத்ததன் மூலம் UCIARS ஆனது ஒரு சிறப்பு திருப்புமுனையை எட்டியது. இந்த முக்கியமான சந்தர்ப்பம் எமது நிறுவனத்தின் நீண்டகால தேவையை பூர்த்தி செய்வதாக அமைந்தது. இது எங்கள் மாணவர் சமூகத்திற்கு வளங்களுக்கான வசதி மற்றும் அணுகலை மேம்படுத்துகிறது. மாணவர்களுக்கு இதன் மூலம் அச்சுப் பிரதிகள், ஆய்வுப் பொருட்களின் பிரதிகள் மற்றும் ஏனைய அத்தியாவசிய ஆவணங்களை எளிதாக பெற்றுக்கொள்வதற்கு முடியுமாக இருக்குமென்பதோடு, அதன் மூலம் அவர்களுடைய கற்றல் மற்றும் ஆராய்ச்சி முயற்சிகளுக்கு உதவி புரிகின்றது. அது மட்டுமன்றி, இந்த நிறுவனம் எங்கள் மாணவர்களுக்கு உகந்த மற்றும் சிறந்த கற்றல் சூழலை வழங்குவதற்கான எமது அர்ப்பணிப்பை வலியுறுத்துகின்றது. UCIARS இன் கல்வித் தேவைகளைத் தொடர்ந்து மேம்படுத்துவதற்கான எமது அர்ப்பணிப்பை இது வெளிப்படுத்துகின்றது. தகவல் தொடர்பு நிலையம் தாபிக்கப்பட்டமையானது நமது மாணவர் சமூகத்தின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நமது தொடர்ச்சியான முயற்சிகளில் ஒரு நேர்மறையான அடுத்தகட்ட நடவடிக்கையைக் குறித்து நிற்கின்றது. இந்த நிலையமானது, பல்வேறு தகவல் தொடர்பாடலுடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கான மையமாக எங்கள் பங்குதாரர்களுக்கு

அத்தியாவசிய வளங்களுக்கான தடையற்ற அணுகலுக்கான வசதிகளை வழங்கியவாறு எமது நிறுவனத்தின் கட்டாய அங்கமொன்றாக மாறுமென நாம் எதிர்பார்க்கின்றோம்.

## 5. JICA நிகழ்ச்சித் திட்டம் 2023/2024 UCIARS, வெலிகத்தை

ஜய்க்கா குழு மற்றும் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் எச்.டீ.கருணாரத்ன அவர்களின் நிகழ்ச்சி நிரலுக்கமைய ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தின் (JICA) நிகழ்ச்சித் திட்டம் - 2023/2024இற்கான பங்கேற்பாளர்கள் 2023 நவம்பர் 23 ஆம் திகதி ஹம்பாந்தோட்டை வெலிகத்தையில் அமைந்துள்ள கொழும்புப் பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கை நிறுவகத்திற்கு (UCIARS) கள விஜயமொன்றை மேற்கொண்டு வருகை தந்தனர். ஜப்பானின் விவசாய அபிவிருத்தி தொடர்பான விழிப்புணர்வு உரைத் தொடரொன்றும் நடாத்தப்பட்டது. ‘கியுசு’ பல்கலைக்கழகத்தின் மதிப்புக்குரிய பேராசிரியர் கலாநிதி Kazuo Ogata ஜப்பானின் விவசாயத் துறையினால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட புதுமை பயன்பாடுகள் பற்றிய தெளிவை பெற்றுக்கொடுத்ததுடன் றுஹுணு பல்கலைக்கழகத்தின் விவசாயத் துறை பேராசிரியர் கலாநிதி இந்திக்க பலிஹக்கார அவர்களால் மேலதிக விழிப்புணர்வூட்டல் அமர்வும் நடாத்தப்பட்டது.

## 6. புத்தக வெளியீட்டு நிகழ்ச்சி

UCIARS இனால் 2023 டிசம்பர் 14 ஆம் திகதி "Basics of Plant Biology" மற்றும் "Plant Morphology" எனும் இரண்டு அற்புதமான புத்தகங்கள் வெளியிடப்பட்டன. இந்நூல் நிறுவனத்தின் கல்விசார் பிரிவுக்கு பெரும் பங்களிப்பை வழங்கும் கலாநிதி என்.பி. விதானபத்திரன மற்றும் எல்.எம். ரிப்னாஸ் ஆகியோர் இவற்றை எழுதினார்கள். இந்த நிகழ்வில் UCIARS இன் அனைத்து பணியாட்குழு ஊழியர்களும் கலந்து கொண்டனர். இந்த வெளியீட்டு நிகழ்வானது UCIARS இற்கு ஒரு பெருமைமிக்க சந்தர்ப்பமாக அமைந்ததுடன், தாவர உயிரியல் துறையில் அறிவை மேம்படுத்துவதற்கான அதன் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது. கற்பவர்களிடத்தில் தாவர அறிவியலைப் பற்றிய ஆழமான புரிதலை வழங்குவதற்கு மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கான மதிப்புமிக்க வளமாக இதனைக் கருதலாம்.

## 7. விவசாய இயந்திர சாதனங்களைப் பயிற்றுவித்தல் மற்றும் ஒத்துழைப்பு மேம்பாட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU)

Browns Agriculture Company PLC மற்றும் கொழும்புப் பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கை நிறுவகத்திற்கிடையில் (UCIARS) இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) ஒத்துழைப்புக் கூட்டாண்மையை நிறுவுவதற்கான ஒரு முக்கியமான நடவடிக்கையை குறிக்கின்றது. 2023 ஆகஸ்ட் 28 ஆம் திகதி Browns Agriculture Company PLC சார்பாக தலைமை செயற்பாட்டு அலுவலர் திரு. சஞ்சய நிஷ்சங்க மற்றும் UCIARS சார்பாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எச்.டி. கருணாரத்ன ஆகியோர் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இலங்கையில் ஒரு புதிய விவசாய இயந்திர சாதனங்கள் பயிற்சித் திட்டமொன்றை மேம்படுத்துவதற்கான வலுவான அடித்தளத்தை உருவாக்குவதே இந்த ஒத்துழைப்பின் நோக்கமாகும். விவசாயத் துறையில் ஆராய்ச்சி சிறப்பு மற்றும் செய்முறை பயன்பாட்டிற்கான அவர்களுடைய அர்ப்பணிப்பை மேலும் பலப்படுத்தியவாறு UCIARS இன் தனித்துவமான சக்திகளை அடிப்படையாகக் கொண்ட தொடர்ச்சியான கூட்டுச் செயல்பாடுகளை புரிந்துணர்வு ஒப்பந்தம் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்றது.

I. தென் வலயத்தில் விவசாய இயந்திர சாதனங்கள் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை நிறுவுதல்
II. பல்வேறு தரப்புக்கள் மற்றும் விவசாய சமூகங்களுக்கான பயிற்சித் திட்டங்களை ஆரம்பித்தல்.
III. பட்டப் படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களில் தொழில்நுட்ப பயிற்சியை ஒருங்கிணைத்தல்.
IV. விவசாய இயந்திரங்களை மேம்படுத்துவதற்கான ஒத்துழைப்பு ஆராய்ச்சி திட்டங்களை மேற்கொள்ளல்.
V. வர்த்தகமயமாக்கல் மற்றும் காப்புரிமை அனுமதிப்பத்திரத்தை மேம்படுத்துதல்
VI. அறிவு விரிவாக்கம் மற்றும் பரவல்
VII. விவசாய இயந்திர சாதனங்கள் சார்ந்த கல்விக்கான ஆசிரியர் பயிற்சித் திட்டங்களைத் தொடங்குதல்.
VIII. இயந்திர சாதனங்கள் மற்றும் பொருட்களுக்கான மாதிரிப் பிரிவை அமைத்தல்.

இந்த கூட்டாண்மைக்கு Browns Agriculture Company இன் அர்ப்பணிப்பு குறைவின்றிக் கிடைப்பதுடன், நிறுவனத்தினால் பயிற்சிக்குத் தேவையான இயந்திர சாதனங்கள், விரிவுரைகள் மற்றும் பொருட்கள் போன்ற கல்விசார் வளங்களை விநியோகிப்பதற்கான வசதிகளை வழங்குகின்றது. அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் கோட்பாட்டு ரீதியிலான அறிவு மற்றும் செய்முறை பயிற்சி வழங்கப்படுகிறது. பயிற்சித் திட்டங்களின் உச்சக்கட்டத்தில், பங்கேற்பாளர்களின் புதிய திறன்கள் மற்றும் நிபுணத்துவத்திற்கான சான்றாக சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

**8.** கொழும்புப் பல்கலைக்கழகம் மற்றும் இந்துருசிறி தளபாடங்கள், வல்பொல கமகே சந்திரசேன ஆகியோருக்கு இடையில் எஞ்சிய வாழை இலைகளைப் பயன்படுத்தி உயிரித் தகடுகளை உற்பத்தி செய்வதற்கான இயந்திரத்தை உற்பத்தி செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2023.02.24 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

## 2.1 கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்திறன்

கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழில் நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகமானது விவசாயத்துடன் சம்பந்தப்பட்ட விவசாய கைத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற நபர்களைப் போன்றே உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட விவசாய தொழில்நுட்பப் பட்டத்தை வழங்குவதற்காக இலங்கையின் முன்னோடி நிறுவகமொன்றாக 2008 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. அனைத்துப் பாடங்களினதும் உள்ளடக்கங்கள் இணையவழி கற்றல் முகாமைத்துவ முறைமையில் (LMS) காணப்படுவதுடன், விரிவுரைகளுக்கு கலப்புக் கற்றல் அணுகுமுறை பயன்படுத்திக்கொள்ளப்படுவதனால் செய்முறை மற்றும் கள விஜயம் என்பவற்றுக்க மாணவர்களின் பங்கேற்பு கணிசமானளவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. பட்டப் படிப்பை நிறைவு செய்துள்ள ஏழு மாணவர் குழுக்கள் இருப்பதுடன் அவர்கள் தேசிய பொருளாதாரத்திற்கு நேரடி உள்ளீடுகளை வழங்கி இலங்கையின் விவசாய அபிவிருத்திக்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை வழங்குகின்றனர். தற்போது சுமார் 1000 மாணவர்கள் பட்டப் பாடநெறியைப் பயிலுகின்றனர்.

***கொழும்புப் பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கை நிறுவகத்தின் (UCIARS) OBE/LCT (முழு நேர மற்றும் பகுதி நேரப் பாடநெறிகள்) இணங்க விவசாய தொழில்நுட்ப சிறப்புப் பட்டத்தின் (BAgroTechHons) திருத்தப்பட்ட பாடத் திட்டம்***

**பட்டதாரி பற்றிய விவரக் குறிப்பு**

1. விவசாய நடவடிக்கைகள் பற்றிய குறிப்பிட்ட அறிவு மற்றும் திறன்களை பரப்புதல் மற்றும் காட்சிப்படுத்தல்
2. விவசாயம் சார்ந்த பிரச்சினைகளை விஞ்ஞான பூர்வமாக அடையாளம் காணல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுகளைக் கண்டறிதல்.
3. படைப்பாற்றல் மிக்க தொழில் முயற்சியாளர்
4. சிறந்த தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப திறன்களைக் கொண்ட சமூகத் தலைவர்
5. வாழ்நாள் முழுவதும் கற்றலுக்கான சுய ஊக்கத்தை ஏற்படுத்தல்
6. தனிப்பட்ட, சமூக மற்றும் சுற்றுச்சூழல் முகாமையாளர்

***நிகழ்ச்சித் திட்ட கற்றல் பெறுபேறுகள் (PLOs)***

1. பயிர்கள் மற்றும் விலங்குகள் உற்பத்தியில் சிறப்புக் கோட்பாடுகள், எண்ணக்கருக்கள் கோட்பாடுகள், தொழில்நுட்பங்கள் மற்றும் திறன்களைப் பயன்படுத்துதல் மற்றும் காண்பித்தல் (காட்சிப்படுத்தல்)
2. விவசாயத்துடன் தொடர்புடைய பிரச்சனைகளை கண்டறிந்து அவற்றிற்கு விஞ்ஞானபூர்வமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுகளை கண்டறிதல்.
3. விவசாயத்தில் தரவுகள் மற்றும் தகவல்கள் சேகரிப்பு, பொழிப்பு மற்றும் பகுப்பாய்வு மற்றும் விரிவான முடிவுகள்.
4. நிலைபெறுதகு விவசாய வணிக முயற்சிகளுக்கு தொழில் முயற்சிகள் மற்றும் முகாமைத்துவ திறன்களை வெளிப்படுத்துதல் மற்றும் சாத்தியமான கைத்தொழில்துறை கூட்டாண்மை மற்றும் சமூக செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

5. சிறந்த தலைமைத்துவ குணப் பண்புகளை வெளிப்படுத்துதல் மற்றும் நல்ல தகவல் தொடர்பாடல், ICT, பகுப்பாய்வு ரீதியிலான மற்றும் புதுமைத் திறன்களைக் கொண்ட குழுக்களில் பணியாற்றுதல் மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றலில் ஈடுபடுதல்.
6. நிலைபெறுதகு சமூக மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்காக தனிநபராகவும் குழுவாகவும் திறம்பட பணியாற்றுதல்.

***நுழைவுக்கான தகைமைகள்***

**1. பொதுவான நுழைவு:**

**A பிரிவு மாணவர்கள்**

விஞ்ஞானப் பாடத் துறை அல்லது தொழில்நுட்பப் பாடத் துறையில் G.C.E (A/L) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**மற்றும்**

நிறுவகத்தினால் நடாத்தப்படும் நுழைவுக்கான பரீட்சையில் சித்தியடைதல்

**B பிரிவு மாணவர்கள்**

ஏதேனுமொரு பாடத் துறையில் க.பொ.த (உ.த.) பரீட்சையில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் விவசாயத் துறையில் மூன்று வருட அனுபவம் (குறித்த வதிவிடப் பிரதேசத்தின் கமநல நிலையத்தின் விவசாய ஆலோசகர் மற்றும் அபிவிருத்தி அலுவலரால் சான்றளிக்கப்படல் வேண்டும்.)

அல்லது

க.பொ.த (சா.த.) பரீட்சையில் விஞ்ஞானம் மற்றும் கணிதம் உட்பட (03 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்கள்) சித்தியடைந்திருத்தல் மற்றும் விவசாயத் துறையில் ஐந்து வருட அனுபவம் (குறித்த வதிவிடப் பிரதேசத்தின் கமநல நிலையத்தின் விவசாய ஆலோசகர் மற்றும் அபிவிருத்தி அலுவலரால் சான்றளிக்கப்படல் வேண்டும்.)

மற்றும்

நிறுவகத்தினால் நடாத்தப்படும் நுழைவுக்கான பரீட்சையில் சித்தியடைதல்

**2. பக்கவாட்டு நுழைவு மாணவர்கள் (Lateral entry students):**

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிருந்து விவசாயத்தில் டிப்ளோமா (NVQ மட்டம் 05) பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு 30 கிரெடிட் பெறுமதிகளை பூரணப்படுத்தியதன் பின்னர் இரண்டாம் ஆண்டில் நுழையலாம்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிருந்து விவசாயத்தில் டிப்ளோமா (NVQ மட்டம் 06) பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு 60 கிரெடிட் பெறுமதிகளை பூரணப்படுத்தியதன் பின்னர் மூன்றாம் ஆண்டில் நுழையலாம்.

**விவசாய தொழில்நுட்ப சிறப்புப் பட்டம் (BAgroTech Hons)**

விவசாய தொழில்நுட்ப சிறப்புப் பட்டத்திற்கான அனைத்துப் பாடநெறிக் குறியீடுகள், பாடநெறிப் பெயர்கள், GPA தர மதிப்புக்களைக் கொண்ட பாடநெறிகள், GPA தர மதிப்புக்கள் இல்லாத பாடநெறிகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டத்தின் கட்டாயப் பாடநெறிகளின் தொடர்புகளின் மணித்தியாலங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடநெறிக் குறியீட்டின் முதல் இரண்டு எழுத்துக்கள் பாடநெறி வழங்கப்படும் பிரிவைக் குறிக்கும் (AT - விவசாய தொழில்நுட்பப் பிரிவு, FT - உணவுத் தொழில்நுட்பப் பிரிவு) அல்லது பொதுவான பாடநெறி -CC எனக் குறிப்பிடப்படுகின்றது. பாடநெறி இலக்கத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் பாடநெறி வழங்கப்படும் ஆண்டு மற்றும் கல்வித் தவணையை (செமஸ்டரைக்) குறிக்கின்றது. மூன்றாவது இலக்கமானது அந்தப் பாடநெறிக்காக தொடர்புடைய பிரிவினால் ஒதுக்கப்பட்டுள்ள இலக்கமாகும். இறுதி இலக்கமானது அந்தப் பாடநெறிக்கு ஒதுக்கப்பட்ட GPA வரவுகளின் எண்ணிக்கையைக் குறிக்கிறது.

ஒரு பாடநெறியொன்றுக்கான மொத்த தொடர்பு மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டுள்ள கோட்பாடு – TO, செய்முறை – P, மற்றும் சுய கற்றல் – IN ஊடாக LMS (அட்டவணை 10 மற்றும் 11) ஒதுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை இல. 10 :**

**Theory (கோட்பாடு): T, Practical (செய்முறை) - P, Individual Leaning (சுய கற்றல் ) - IL**

| பாடக் குறியீடு | பிரிவு | பாடத்தின் பெயர் | தர மதிப்பு GPA credits | தர மதிப்புக்கள் இல்லாத NGPA credits | கற்கைக் காலம் (மணி.) T:P:IL |
|---|---|---|---|---|---|
| **மட்டம் 3 (முதலாவது வருடம்) - செமஸ்டர் (தவணை) I** | | | | | |
பொதுவாக இழைய வளர்ப்பு வாழைக்கான கேள்வியானது அநேகமாக காலநிலை நிலைமையில் தங்கியிருப்பதுடன் மழை காலங்களில் (செப்டம்பர் இருந்து ஏப்ரல் வரை) அதிக கேள்வியும் கோடை காலத்தில் (மே தொடங்கி ஆகஸ்ட் வரை) குறைந்த கேள்வியும் நிலவுகின்றது. மழை வீழ்ச்சிப் போக்கு பயிர்ச் செய்கை மீது நேரடித் தாக்கத்தினை ஏற்படுத்துவதுடன், விவசாயிகள் மழை காலத்தில் அதிக அளவில் இழைய வளர்ப்பு வாழையையே நடுகின்றனர். இக்காலப் பகுதியில் விஷேடமாக டிசம்பர் மற்றும் ஏப்ரல் பண்டிகைக் காலங்களில் வாழைப் பழத்துக்கான கேள்வி நிலவுகின்றமையினால் அக்காலப் பகுதியை இலக்காகக்கொண்டு விவசாயிகள் வாழைப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்றனர். அதனால், இவ்வாறான உகந்த காலநிலை மற்றும் சந்தையின் கேள்வி என்பனவற்றை கருத்திற் கொண்டு விவசாயிகள் இழைய வளர்ப்பு வாழைக் கன்றுகளை கொள்வனவு செய்கின்றனர். ஆனாலும் 2023 இல் இழைய வளர்ப்பு வாழைக் கன்று விற்பனை ஆண்டு பூராவும் சம அளவில் காணப்பட்டது.

**அட்டவணை 28 : கடந்த ஏழு வருட காலத்தில் கன்று விற்பனையை ஒப்பீடு செய்தல் (எண்ணிக்கை)**

| மாதம் | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 17,980 | 17,759 | 3,851 | 27,222 | 5,551 | 16,392 | 13,954 |
| பெப்ரவரி | 22,141 | 12,738 | 9,704 | 526 | 2,712 | 8,312 | 15,256 |
| மார்ச் | 22,536 | 26,232 | 2,344 | 4,292 | 5,048 | 7,916 | 17,899 |
| ஏப்ரல் | 21,467 | 15,259 | 11,524 | 19,668 | 5,617 | 7,967 | 16,015 |
| மே | 19,652 | 18,968 | 4,923 | 7,434 | 5,785 | 14,800 | 18,565 |
| ஜூன் | 20,780 | 6,489 | 6,211 | 10,956 | 6,222 | 1,149 | 17,663 |
| ஜூலை | 20,576 | 11,049 | 7,008 | 14,276 | 6,348 | 2,100 | 19,280 |
| ஆகஸ்ட் | 21,097 | 13,454 | 15,425 | 9,106 | 6,820 | 8,712 | 18,815 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| செப்டம்பர் | 20,877 | 7,697 | 21,701 | 5,791 | 7,384 | 6,062 | 23,253 |
| ஒக்டோபர் | 22,302 | 19,692 | 5,988 | 5,169 | 8,514 | 8,326 | 22,597 |
| நவம்பர் | 21,137 | 19,349 | 12,744 | 2,810 | 5,759 | 20,996 | 16,665 |
| டிசம்பர் | 20,530 | 14,405 | 8,027 | 4,658 | 7,212 | 11,285 | 22,830 |
| **மொத்தம்** | **2,51,075** | **1,83,091** | **109,450** | **111,908** | **72,972** | **114,017** | **222,792** |




**உரு.இல. 04 : 2017 - 2023 காலப் பகுதியில் கன்று விற்பனையை ஒப்பீடு செய்தல்**

**அட்டவணை 29 : கன்று விற்பனை அடிப்படையில் ஒப்பீடு செய்தல் - 2023**

| **விபரம்** | **கன்றுகளின் எண்ணிக்கை** |
|---|---|
| கன்றுகள் விற்பனை100> | 209,056 |
| கன்றுகள் விற்பனை100< | 13,736 |




**உரு.இல. 05 : 2023 இல் கன்றுகள் விற்பனை**

**அட்டவணை 30 : இனங்களின் அடிப்படையில் கன்றுகள் விற்பனை - 2023**

| இனம் | கன்றுகளின் எண்ணிக்கை |
|---|---|
| புளி | 185,462 |
| கோழிக்குட்டு | 27,906 |
| குட்டை கவன்டிஸ் (Dwarf Cavendish) | 7,471 |
| சிவப்பு வாழை | 1,953 |




**உரு. இல. 06 :இனங்களின் அடிப்படையில் வாழைக் கன்றுகள் விற்பனை**

2023 ஆம் ஆண்டில் இழைய வளர்ப்பு வாழைக் கன்றுகள் விற்பனை மூலம் நிறுவகத்தினால் **26.6** மில்லியன் ரூபா வருமானம் உழைத்துக்கொள்ளப்பட்டது. கள மட்டத்தில் நோய்கள் தொற்றுதல் குறைந்த மட்டத்தில் நிலவுவதன் காரணமாக புளி வாழை உயர் கேள்வி நிலவும் ஒரு இனமாக இருப்பதுடன் ஐந்து வருடங்கள் வரை உயர் ஈட்டல் சாத்தியத்தகவைக் கொண்டுள்ளது. இரண்டாம் பரம்பரையின்போது ஏற்படும் 'fusarium' எனும் வாடல் நோய் காரணமாக தனி நாற்று முகாமைத்துவ முறையில் விவசாயிகள் 'கோழிகுட்டு' வாழைப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்றனர். குட்டை கெவன்டிஸ் (Dwarf Cavendish) எனும் வாழை இனத்தை ஈர வலயத்துக்கு மாத்திரம் சிபாரிசு செய்ய முடியுமாக இருப்பதுடன் அதற்கு குறைந்த கேள்வி நிலவுவதுடன் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான ஈர வலய விவசாயிகளுக்கு நிறுவனத்தினால் வசதிகள் வழங்கப்படுகின்றது.

இழைய வளர்ப்பு வாழைக்கான கேள்வி பாரம்பரிய முறையில் உற்பத்தி செய்யப்படும் கன்றுகளுக்காக நிலவும் கேள்வியை விடவும் உயர் மட்டத்தில் காணப்படுவதுடன், நீண்ட கால இலாபம் ஈட்டல் மற்றும் குறைந்தளவில் நோய் வாய்ப்படுதல் காரணமாக விவசாயிகளிடத்தில் புளி வாழைக்காக நிலவும் கேள்வி அதிகரித்துள்ளது. நிறுவனத்துடன் தொடர்புகொண்டு நடவடிக்கை மேற்கொள்ளும் விவசாயிகளில் பெரும்பான்மையானோர் (65%) கொள்வனவு ஆற்றல் மிகக் குறைந்த மட்டத்தில் நிலவும் விவசாயிகளாக இருப்பதுடன், நிறுவனத்துடன் இணைந்திருக்கும் உயர் கொள்வனவு ஆற்றலைக் கொண்டுள்ள (35%) விவசாயிகள் குறைந்த வீதத்திலேயே இருக்கின்றனர்.

**அட்டவணை 31 : 2023 ஆம் ஆண்டில் விவசாயிகளின் கொள்வனவு ஆற்றல்**

| விவசாயிகளின் கொள்வனவு ஆற்றல் | விவசாயிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 100 கன்றுகளிலும் அதிகளவு கொள்வனவு செய்த விவசாயிகள் | 216 |
| 100 கன்றுகளிலும் குறைந்தளவு கொள்வனவு செய்த விவசாயிகள் | 404 |




- 100 கன்றுகளிலும் அதிகளவு கொள்வனவு செய்த விவசாயிகள் (65%)
- 100 கன்றுகளிலும் அதிகளவு கொள்வனவு செய்த விவசாயிகள் (35%)

**உரு. இல. 07 : 2023 ஆம் ஆண்டில் விவசாயிகளின் கொள்வனவு ஆற்றல்**

நிறுவகத்தினால் உள்ளூர் விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வாழைக் கன்றுகள் வழங்கப்படுவதுடன் இலங்கையின் கஷ்டப் பிரதேசங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி நிறுவகத்துடன் ஏராளமான விவசாயிகள் இணைந்து செயற்படுகின்றனர். நிறுவனத்தின் கள உத்தியோத்தர்கள் அந்தப் பயிர்களை முறையாக ஒழுங்குபடுத்தி அவர்களுக்குத் தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குகின்றனர். இழைய வளர்ப்பு வாழை பயிரிடும் விவசாயிகளை நாடு முழுவதும் விரிவுபடுத்துவதற்காக இந்த நிறுவகத்தின் உத்தியோகத்தர்கள் முறையான களச் சோதனைகளையும் மேற்கொள்கின்றனர்.

**இழைய வளர்ப்பு வாழைக் கன்றுகளின் உற்பத்திச் செயல்முறை**

இழைய வளர்ப்புத் தொழில்நுட்பம் என்பது தொற்று நீக்கப்பட்ட நிலைமைகளில் செயற்கை ஊடகங்களின் கீழ் வைரஸ்கள் அற்ற தாய் இழையத்திற்கு சமமான கன்றை உற்பத்தி செய்வதாகும். அதனால் இந்தத் தொழில்நுட்பம் சிறப்புமிக்கதாக இருப்பதனால் தாய் இழையத்தை நடுதல் முதல் அது வளர ஆரம்பிக்கும் வரையான அனைத்து செயற்பாடுகளுக்கும் திறமையான மற்றும் நிபுணத்துவ அறிவைக் கொண்ட ஊழியர்கள் அவசியமாகும். இழைய வளர்ப்புத் தொழில்நுட்பம் பிரதானமாக ஐந்து கட்டங்களின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. அவையாவன, நோயற்ற மற்றும் செழிப்பான தாய் தாவரத்தை தெரிவு செய்தல், செயற்கை போசணை ஊடகங்களில் தாய்த் தாவர இழையத்தை நடுதல், தளிர்விடும் கட்டம், ஆரம்ப வளர்ச்சிக் கட்டம் மற்றும் கன்றை வளர்க்கும் கட்டம் என்பனவாகும். ஒடுக்கமுறை வளர்ப்பு ஊடாக வாழைக் கன்றுகள் உற்பத்தி நிறுவனத்தினுள்ளேயே மேற்கொள்ளப்படுவதுடன் உற்பத்தித் தரம் மற்றும் திரிபு (சீரற்ற) நிலைமைகளைக் குறைப்பதற்காக உத்திகள் கையாளப்படுகின்றன.மிகவும் உயர் தரத்திலான ஏற்றுக்கொள்ளப்பட்ட தொற்றுநீக்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் 8 உப பயிர்ச்செய்கை மட்டங்கள் (8 sub culture stages) இடையிலான உச்சளவுகள் பயன்படுத்தப்படுகின்றன. முறையான மற்றும் பூரணமான தரவு அறிக்கைகளை வைத்திருப்பதன் மூலம் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறிப்பிட்ட தாய் இழையம் சம்பந்தமான அனைத்து விபரங்களையும் இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும். ஊழியர்களின் தகுதி இயலளவின் அடிப்படையில் அவர்கள் பொருத்தமான உற்பத்தி சந்தர்ப்பங்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.




**உரு. இல. 08 : இழைய வளர்ப்பு வாழைக் கன்றுகளின் உற்பத்திச் செயல்முறை**

### 3. ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புக்கள்

(ஆராய்ச்சிக்கான தலைப்புக்களின் விளக்கம் மாற்றமடைய முடியுமாக இருக்குமென்பதனால் அந்தத் தலைப்புக்கள் தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்யப்படவில்லை.)

**2023 இல் மேற்கொள்ளப்பட்ட வெளியீடுகள்**

**சுருக்கங்கள் (Abstracts)**

1. I.S. Hettiarachchi, K.G. Ketipearachchi, N.P. Vidanapathirana, S. Subasinghe, B.P. Siriwardena (2023) Morphological Characterization of Turmeric (Curcuma longa) in Gampaha and Kalutara Districts, Sri Lanka, National Symposium on Agro technology and Rural Sciences (NSATRS - 2024), University of Colombo Institute for Agro-technology and Rural Sciences 28th of June 2023, Pp 15
2. Mahaulpatha, W.M.J.C.B, Gunathilake, D.M.C.C. & Chandimala, U.R. (2023). Development of Cookies from Chayote (Sechium edule) Fruit and Wheat (Triticum aestivum) Flour Mixture. International Conference on Building Resilience in Tropical Agro-Ecosystems, Faculty of Agriculture, University of Ruhuna, pp. 127
3. B.P. Siriwardena*, W.M.D.M. Samarasinghe, K.G. Ketipearachchi (2023), Small and medium-sized farmers' perspectives on rubber production; A case study in Monaragala district, Sri Lanka, International Symposium on Agriculture and Environment (2023) University of Ruhuna, Sri Lanka, 18th of May 2023, Pp 90

4. B.P. Siriwardena*, D. Sanjayan, K.G. Ketipearachchi, Knowledge and Adoption Levels of Entrepreneurs in Relation to the Palmyrah Non Food Based Production; A Case Study in Trincomalee District, Sri Lanka, 4th National Symposium on Agro-Technology and Rural Sciences (2023) University of Colombo Institute for Agro-Technology and Rural Sciences – Sri Lanka, 28th June 2023, Pp 05.
5. JL Edirisooriya, SL Nawarathna and GG Bandula (2023), Effect of Plucking Methods on Efficiency of Plucking, Yield and Quality of Tea (Camellia sinensis L.), 4th National Symposium on Agro-Technology and Rural Sciences – 2022, University of Colombo Institute for Agro-Technology and Rural Sciences – Sri Lanka.
6. RMI Gayathri and SL Nawarathna (2023), A review study of Panchagavya application on vegetable crops, International Conference on Building Resilience in Tropical Agro-ecosystems-2023, Sri Lanka.
7. Nelka S.A.P*, S. Subasinghe, N.P. Vidanapathirana, R. Hewawasam, growth, yield and nitrogen use efficiency of maize crop as affected by different sources of nitrogen fertilizer and soil amendments, 4th National Symposium on Agro-Technology and Rural Sciences (2023) University of Colombo Institute for Agro-Technology and Rural Sciences – Sri Lanka, 28th June 2023.

### விரிவாக்கப்பட்ட சுருக்கங்கள் (Extended abstracts)

1. M.M.U.S. Mannapperu, K.G. Ketipearachchi, D.M.C.C. Gunathilake (2023), Development of Snack using Cassava (Manihot esculenta) and Wheat (Triticum aestivum) Flour Mixture, 3rd International Symposium on Agriculture 2023, Faculty of Agriculture, Eastern University Sri Lanka 09th March 2023, Pp 124
2. Sumanasekara H.H.N., Rifnas L.M., Vidanapathirana N.P. (2023). Effects of Different Root Inducing Agents on Cutting Propagation of Tea (Camellia sinensis). 4th National Symposium on Agro-Technology and Rural Sciences (NSATRS 2023). Pp.13.
3. Rathnayake R. M. K. S., Vidanapathirana N. P., Rifnas L. M. and Siriwardana A. J. M. C. M. (2023). Evaluating the suitability of Manilkara zapota (Sapodilla) and Madhuca longifolia (Mee tree) seeldings as the rootstock for grafting Manilkara hexandra (Palu) in Sri Lanka. International Conference on Building Resilience in Tropical Agro-ecosystems (ICBRITAE). Pp. 13.
4. Ahamed N. N., Rifnas L. M., Vidanapathirana N. P., Rifas A. C., Sutharsan S. and Siriwardana A. J. M. C. M. (2023). Effect of gamma irradiation on growth and yield of red onion (Allium cepa L.). Proceedings of International Conference onGB Multidisciplinary Rese-=arch (ICMR). Pp. 11.
5. B.P. Siriwardena*, W.H.H. Wijerathna and K.G. Ketipearachchi, Farmers Acceptance to Growing SUpplementary Food Crops Organically, 3rd International Symposium on Agriculture 2023.

## மாநாட்டு முழு ஆவணங்கள் (Conference full papers)

1. Risni, N.A., Rifnas, L.M., Weerasinghe, S.S. and Siriwardana, A.J.M.C.M. (2023). Development of a tool to apply chemical fertilizer for pineapple (Ananas Comosus) cultivation. 3rd International Conference on Science and Technology. Pp. 108-113.
2. BP Siriwardena, WHH Wijerathna, KG Ketipearachchi., 2023. FARMERS' ACCEPTANCE TO GROWING SUPPLEMENTARY FOOD CROPS ORGANICALLY. 3rd International Symposium on Agriculture 2023, 225-228.

### நூல்கள் (Books)

1. N.P. Vidanapthirana and L.M. Rifnas (2023). Basics of Plant Biology. Published by University of Colombo Institute for Agro-Technology and Rural Sciences. ISBN : 978-624-6034-03-0.
2. N.P. Vidanapthirana and L.M. Rifnas (2023). Plant Morphology. Published by University of Colombo Institute for Agro-Technology and Rural Sciences. ISBN : 978-624-6034-04-7

## நூல் அத்தியாயங்கள் (Book chapters)

1. Chandimala U.R. & Dhushane S. (2023). Application of nanostructures in active food packaging and preservation In Nanotechnology and Nanomaterials in the Agro-Food industries, Elsevier, USA

## ஜர்னல் பத்திரங்கள் (Journal papers)

1. KG Ketipearachchi, D.M.C.C. Gunathilake, BP Siriwardena, M.M.U.S. Mannapperu (2023), Development of Snack using Cassava (Manihot esculenta) and Wheat (Triticum aestivum) Flour ixture, Journal of Agro-technology and Rural Sciences (ATRS), University of Colombo Institute for Agro-Technology and Rural Sciences (UCIARS), 3 (1) Pp 24-27
2. Rifnas, L.M., Vidanapathirana, N.P., Dahanayake, N., Subasinghe, S., Weerasinghe, S.S., Madushani, W.G.C. and Nelka, S.A.P., (2023). Impact of Cobalt-60 gamma irradiation on growth, development, and morphology of Acalypha hispida (Cat's tail plant). Journal of the University of Ruhuna, 11(2), pp.42-52.
3. Vidanapathirana N.P., Rifnas L.M. and Sumanasekara H.H.N. (2023). Effects of Different Root Inducing Agents on Cutting Propagation of Tea (Camellia sinensis). Ann. Res. Rev. Biol, 38(6), pp.30-37.
4. Rifnas L.M., Vidanapathirana N.P., Silva T.D., Dahanayake N., Subasinghe S., Weerasinghe S.S., Nelka S.A.P. and Madushani W.G.C. (2023). Development of Cutting Propagation Technique for Ornamental Plant Allamanda cathartica (Rukkathana). Journal of Agro-Technology and Rural Sciences, 3(1), pp.28-33.
5. Weerasinghe P.O.P., Sutharsan S. and Rifnas L.M. (2023). Influence of Intercropping Green Gram with Two Paddy Varieties on Growth, Yield and its Components to Increase Economic Returns. Asian J. Res. Crop Sci, 8(4), pp.436-442
6. Nowe M. F., Sutharsan S., Srikrishnah S. and Rifnas L. M. (2023). Effects of Different Combinations of Cow Dung and Jeewamirtha Application on Growth and Yield of Vigna Unguiculata L. Asian Journal of Science and Applied Technology. 12(1). 12-16.
7. Chandimala U.R. and Arampath, P.C. (2023). A mini-review on the association of food additives with non-communicable diseases prevalent in modern societies, International Journal of Research Publications, 139(1), 314-327, DOI: .10.47119/IJRP10013911220235763
8. Samarasinghe S.P.A.K., Chandimala U.R., and Gunathilake D.M.C.C. (2023). Production of plant-based milk from local almond nuts (*Terminalia catappa* L.) and evaluation of its sensory and nutritional properties. Journal of Tropical Agriculture Research and Extension; 26(2), pp.104-110, https://doi.org/10.4038/tare.v26i2.5663
9. Singh I R, Nair P N, Gunathilake D M C C., 2023 Assessment of capsicum nutrient levels affected by lime and phosphorus application in Fijian soil. Plant Science Today. 10(1): 74 –79. https://doi.org/10.14719/pst.1856
10. Gunathilake, D.M.C.C., Senadeera,W. 2023 Mild hydrothermal treatment for improving the outturn of Basmati Rice. Journal of Agri-Engineering, 5, 992–1004. https://doi.org/10.3390 /agriengineering5020062
11. Siriwardena, B.P., Abeywickrama, L.M., Sandika, A.L. and Vidanapathirana, N.P., 2023. Freshmen's perspectives towards blended learning in Higher Education-A case study of the University of Colombo Institute for Agro-Technology and Rural Sciences. AGRIEAST, 17(2), pp.31-38.
12. B.P. Siriwardena, W.M.D.M Samarasinghe, N.P. Vidanapathirana, and K.G. Ketipearachchi., 2023. The Impact on Sustainability of Rubber Production by Small and Medium-sized Rubber Farmers in Sri Lanka: A Case Study in Monaragala District, Uva Province. Sri Lanka Journal of Agriculture Economics, 24(1), pp.51-68.

13. Siriwardena, B. P., Jathunarachchi, S. S., & Vidanapathirana, N. P. (2023). Enhancing Small and Medium Scale Enterprises Sustainability: Factors Influencing the Pottery Industry in Sri Lanka. Indonesian Journal of Agricultural Research, 6(3), 147-158.
14. Bandusekara, B. S., Pushpakumara, D. K. N. G., & Bandaranayake, P. C. G. (2023). Comparison of High-Performance Liquid Chromatography (HPLC) Profiles and Antimicrobial Activity of Different Cinnamomum Species in Sri Lanka. Tropical Agricultural Research, 34(2).
15. Hathurusinghe, H. A. B. M., Bandusekara, B. S., Pushpakumar, D. K. N. G., Ranawaka, R. A. A. K., & Bandaranayake, P. C. G. (2023). Possibility of utilizing Inter Simple Sequence Repeat regions, bark powder morphology and floral morphometry to characterize the Cinnamomum species in Sri Lanka. Tropical Agricultural Research, 34(1).

**புத்தாக்கம் மற்றும் புதிய கண்டுபிடிப்புக்கள்**

**1. உமி, தேயிலை கழிவுகள் மற்றும் கடற்பாசி சாறுகளால் செறிவூட்டப்பட்ட உயிர் நாற்றுமேடை உருண்டைக் கட்டைகள் (நாற்றங்கால்)**

எரிக்கப்பட்ட உமி, தேயிலை கழிவுகள் மற்றும் கடற்பாசி சாறு போன்ற கழிவுகளை பயன்படுத்தி மாணவனொருவனால் மேம்படுத்தப்பட்ட உயிர் நாற்றுமேடை கட்டை உருண்டை கட்டை உற்பத்தியானது நிலைபேறான விவசாயத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை பிரதிபலிக்கிறது. இந்தப் புதிய கண்டுபிடிப்பு கழிவு முகாமைத்துவம் பற்றிய பிரச்சனையை மட்டுமன்றி, காய்கறி பயிர்களை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட கைகளில் எடுத்துச் செல்வதற்கு முடியுமான சிறிய நாற்றங்கால்களுக்கு நடைமுறை தீர்வுகளையும் வழங்குகிறது. இந்த வளர்ச்சியின் பல்வேறு அம்சங்களை ஆழமாக ஆராய்வோம். கழிவுகளின் பயன்பாடு: எரிக்கப்பட்ட உமி, தேயிலை கழிவு போன்ற கழிவுகளைப் பயன்படுத்துவதன் மூலம், இந்தப் புதிய கண்டுபிடிப்பானது நீக்கப்படுகின்ற அல்லது சுற்றுச்சூழல் மாசுபாட்டிற்கு பங்களிக்கும் பொருட்களை பயன்மிக்க வகையில் மீள் சுழற்சி செய்கிறது. கழிவுகளை பெறுமதிமிக்க வளமாக மாற்றியமைக்கும் இந்த செயல்முறை சுழற்சிப் பொருளாதாரக் கொள்கைகளுடன் ஒத்துப்போகிறது. கையில் எடுத்துச் செல்வதற்கு முடியுமான மற்றும் நாற்றுமேடைகளில் இந்த மேம்படுத்தப்பட்ட உயிரி கட்டைகளைப் பயன்படுத்துவது விவசாயிகளுக்கு மற்றும் பயிர்ச்செய்கையாளர்களுக்கு சாதகமான பொருளாதார நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு முடியும். பயிர் உற்பத்தித்திறன் மற்றும் தரம் அதிகரித்தமையினால் உயர் விற்பனை விளைச்சல் மற்றும் முதலீட்டில் சிறந்த அனுகூலமாகலாம். அது மட்டுமன்றி உயிர் நாற்றுமேடை கட்டைகள் உற்பத்தியின்போது கழிவுகளைப் பயன்படுத்துவது பாரம்பரிய உரங்கள் அல்லது மண்ணைத் திருத்தியமைத்தலுடன் ஒப்பிடும்போது செலவை மீதப்படுத்திக்கொள்வதற்கு முடியுமாக இருக்கும்.



**2. மேம்படுத்தப்பட்ட தட்டுக்களை உருவாக்கும் இயந்திரம்**

தட்டுக்களை உருவாக்குகின்ற இயந்திரத்திரமொன்றின் மேம்படுத்தப்பட்ட அறிமுகப்படுத்தலானது நிலையான பொதியிடல் மற்றும் கழிவுகளைக் குறைக்கின்ற துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காண்பிக்கின்றது. இந்த மின்சாரத்தில் இயங்கும் இயந்திரம் தட்டுக்கள் உற்பத்தி செயல்முறையில் புரட்சிமிக்க மாற்றத்தை ஏற்படுத்தி முன்னரைப் பார்க்கிலும் பல மேம்படுத்தல்களை வழங்குகிறது. கையினால் அல்லது பகுதியளவு தானியங்கி செயல்பாட்டில் தங்கியிருக்க முடியுமான முந்தைய உற்பத்திப் பதிப்புக்களைப் போலல்லாமல், இந்த இயந்திரத்தின் மின்சாரத்தில் இயங்கும் வடிவமைப்பு வட்டு உருவாக்கும் செயல்முறையை ஒழுங்குபடுத்துகிறது. இது செயல்திறனை

அதிகரிப்பது மட்டுமல்லாமல் தொழிலாளர் தேவைகளையும் குறைக்கிறது, இது வணிகங்களுக்கு அணுகக்கூடியதாகவும் இலாபகரமானதாகவும் காணப்படுகின்றது.

இந்த இயந்திரத்தின் ஒரு சிறந்த அம்சம் என்னவெனில், தட்டுகளின் உற்பத்திக்கு எந்த தாவர இலையையும் பயன்படுத்தக்கூடிய திறன் ஆகும். இந்த பன்முகத்தன்மை பரந்த அளவிலான சாத்தியங்களுக்கு வாய்ப்பளிக்கின்றது. பல்வேறு வகையான இலைகளை ஏற்றுக்கொள்வதன் மூலம், இயந்திரம் பல்வேறு பகுதிகளுக்கு நெகிழ்வுத்தன்மை மற்றும் தகவமைப்புத் தன்மை மற்றும் இலைகள் கிடைப்பதில் பருவகால மாற்றங்களை வழங்குகின்றது. வாழை மற்றும் பனை ஓலைகளைப் பயன்படுத்தி தட்டுக்கள் உற்பத்தியின் வெற்றிகரமான சோதனைகள் இயந்திரத்தின் பல்துறை மற்றும் செயல்திறனை நிரூபிக்கின்றன. வாழை மற்றும் பாக்கு இலைகள் பல பகுதிகளில் எளிதாக பெற்றுக்கொள்ள முடியுமாக இருப்பதோடு, அறுவடைக்குப் பின்னர் பெரும்பாலும் கழிவுப் பொருட்களாகக் கருதப்படுகின்றன. இந்த இலைகளை சூழல் நேய தட்டுக்களாக மாற்றுவதன் மூலம், இயந்திரம் விவசாயம் சார்ந்த துணை உற்பத்திகளுக்கு மதிப்பை சேர்ப்பதுடன் சூழல் தாக்கத்தையும் குறைக்கின்றது. வாழை மற்றும் பாக்கு இலைகளுடன் கூடிய வெற்றிகரமான பரிசோதனையானது, தட்டுக்கள் உற்பத்திக்கு கிடைக்கும் பொருட்களின் வரையறையை விரிவுபடுத்தி, ஏனைய இலைகளுடன் மேலும் பரிசோதனை செய்வதற்கான வாய்ப்பை பரிந்துரைக்கிறது. இது தவிர நிலவுகின்ற தொழில்நுட்ப முன்னேற்றங்கள் இயந்திர வடிவமைப்பு, செயல்திறன் மற்றும் வெவ்வேறு பத்திர வகைகளுடன் இணக்கத்தன்மை ஆகியவற்றில் மேலும் மேம்பாடுகளுக்கு வழிவகுக்கும்.



### 3. வாழைக்குலையை கையாளுகின்ற ஸ்மார்ட் உபகரணத்தை நிர்மாணித்தல்

வாழைக் குலையைக் கையாளுகின்ற ஸ்மார்ட் உபகரணத்தை மேம்படுத்தலானது வாழைப் பயிர் செய்கை தொழில்நுட்பத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது, இது விவசாயிகளுக்கு வாழைக் குலையையைக் கையாள்வதற்கான வினைத்திறன்மிக்க தீர்வை வழங்குகுின்றது. இந்தப் புதிய இயந்திரம் மூன்று அத்தியாவசிய செயல்பாடுகளை ஒருங்கிணைக்கிறது - அத்தியாவசிய செயல்பாடுகள்: வாழைப் பூவை அகற்றுதல் மற்றும் உறையிடல் - ஒரே சாதனமாக, முழுக் குலையையும் கையாளும் செயல்முறையையும் ஒழுங்குபடுத்துகிறது. இந்த 3-in-1 உபகரணத்தின் தனித்துவமான அம்சம் மற்றும் அனுகூலங்கள் பற்றிக் கண்டறிந்தால் : வாழைக் குலையைக் கையாளுகின்ற ஸ்மார்ட் உபகரணத்தின் சிறப்புப் பண்பு என்னவெனில், தரைமட்டத்திலிருந்து செயற்பாட்டிற்கான அதன் வடிவமைப்பாகும். விவசாயிகளுக்கு வாழைக் குலையைக் கையாள்வதற்காக மேலே ஏற வேண்டிய தேவையை நீக்குகிறது. இது வீழ்தல் மற்றும் காயங்கள் ஏற்படுவதற்கான அபாயத்தைக் குறைப்பதன் மூலம் தொழிலாளர் பாதுகாப்பை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், அதிக உயரத்தில் இருந்து குலைகளை அணுகுவதற்கும் கையாளுவதற்கும் செலவிடும் நேரத்தைக் குறைப்பதன் மூலம் செயற்பாட்டுத் திறனை அதிகரிக்கிறது. தரை மட்டத்திலிருந்தான செயற்பாடானது பல்வேறு திறன்கள் மற்றும் உடல் சார்ந்த ஆற்றல்களைக் கொண்டுள்ள பயிர்ச் செய்கையாளர்களுக்கு இயந்திரத்தை அணுகக்கூடியதாகவும், பயனர்களுக்கு ஏற்றதாகவும் ஆக்குகிறது.

வாழைக் குலையைக் கையாளுகின்ற ஸ்மார்ட் உபகரணத்தின் பணிச்சூழலியல் (ergonomic) வடிவமைப்பு பயன்படுத்துவோரின் இலகு மற்றும் வசதிக்கு முன்னுரிமை அளிக்கிறது. கட்டுப்பாடுகள், மாற்றக்கூடிய அமைப்புகள் மற்றும் ergonomic கையாளுதல் சிறப்பம்சங்கள் ஊடாக விவசாயிகளுக்கு குறைந்த உடல் உழைப்புடன் அதிக களைப்பின்றி இயந்திரத்தை திறமையாக இயக்க முடியும் என்பதை உறுதி செய்கிறது. இந்த பணிச்சூழலியல் (ergonomic) வடிவமைப்பு ஊடாக ஊழியர்களின் நல்வாழ்வு மற்றும் உற்பத்தித்திறன் ஊக்குவிக்கப்படுவதுடன், வாழைப் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் சாதகமான பணிச்சூழலுக்கு பங்களிக்கிறது.



## 4. பால் சார்ந்த சவர்க்காரம் (சோப்பு)

மல்லிகை மற்றும் ரோஜா கலந்த பால் சார்ந்த சவர்க்கார உற்பத்தியானது தனிப்பட்ட உபசரணைத் துறையில், குறிப்பாக ஹோட்டல் துறையில் குறிப்பிடத்தக்க புத்தாக்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இந்த தனித்துவமான மூலப்பொருட்களின் கலவையானது பல நன்மைகளை வழங்குவதுடன் சவர்க்காரத்தின் கூட்டு அளவு விருந்தோம்பல் துறைக்கு மிகவும் பொருத்தமானதாக அமைகிறது. இந்த தயாரிப்பின் அம்சங்கள் மற்றும் நன்மைகளை இன்னும் விரிவாக ஆராய்வோம்.

மல்லிகை மற்றும் ரோஜா கலந்த பால் சார்ந்த சவர்க்காரம் போன்ற உயர் தரத்திலான வசதிகளை விருந்தினர்களுக்கு வழங்கல், மேம்பட்ட விருந்தோம்பல் அனுபவத்திற்கு பங்களிக்கிறது. சவர்க்காரத்தின் ஆடம்பரமான உணர்வும் வசீகரிக்கும் நறுமணமும் ஹோட்டலின் சலுகைகளுக்கு நேர்த்தியையும் நுட்பத்தையும் சேர்க்கிறது. விருந்தினர்கள் மீது நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தி மீண்டும் வருகைகளை ஊக்குவிக்கிறது. சிந்தனைமிக்க வசதிகள் மூலம் விருந்தோம்பல் அனுபவத்தை மேம்படுத்துவதன் மூலம், ஹோட்டல்களில் போட்டித் தன்மை வாய்ந்த சந்தையில் தங்களை வேறுபடுத்திக் கொள்ளலாம் மற்றும் வாடிக்கையாளர் விசுவாசத்தை உருவாக்கிக்கொள்வதற்கு முடியும்.

பால், மல்லிகை மற்றும் ரோஜா போன்ற இயற்கை மூலப்பொருட்களின் பயன்பாடு சுத்தமான மற்றும் சுற்றுச்சூழல் நேய நட்பு தனிப்பட்ட உபசரணை தயாரிப்புகளுக்கான நுகர்வோர் விருப்பங்களுடன் ஒத்துப்போகிறது. விருந்தினர்கள் அதிகளவில் கடும் இரசாயனங்கள் மற்றும் செயற்கை வாசனை திரவியங்கள் இல்லாத பொருட்களைத் தேடுகின்றனர், மாறாக சருமத்தில் மென்மையான மற்றும் சூழல் நேய இயற்கை கலவைகளைத் தேர்வு செய்கிறார்கள். இயற்கையான மூலப் பொருட்களால் தயாரிக்கப்பட்ட சவர்க்காரத்தை தேர்ந்தெடுப்பதன் மூலம், ஹோட்டல்கள் சூழல் நேய பயணிகளை ஈர்த்து நிலையான தன்மை மற்றும் ஆரோக்கியத்திற்கான தங்கள் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றன.



5. **உழுகின்றபோதே பாத்திகளை தயார் செய்வதற்கும் மட்டப்படுத்துவதற்கும் முடியுமான திறன் கொண்ட கலப்பை**

உழுகின்ற போது வரம்புகளை சரிசெய்யக்கூடிய பிரத்யேகமாக மாற்றியமைக்கப்பட்ட கலப்பையின் அறிமுகமானது விவசாய இயந்திரங்களில் குறிப்பிடத்தக்க புத்தாக்கத்தை பிரதிபலிக்கிறது. இது விவசாயிகளுக்கு நிலத்தை தயாரிப்பதற்கு மிகவும் திறமையான மற்றும் செலவு குறைந்த தீர்வை வழங்குகிறது. இந்த புதுப்பிக்கப்பட்ட கலப்பையின் முக்கிய அம்சங்களில் ஒன்று, ஒரே நேரத்தில் இரண்டு பணிகளைச் செய்யும் திறன் ஆகும் - உழுதல் மற்றும் வரம்புகளை தயார் செய்தலாகும். பாரம்பரியமாக, இந்தப் பணிகள் தனித்தனியாக செய்யப்படுவதுடன் மேலதிக நேரம், உழைப்பு மற்றும் உபகரணங்கள் தேவைப்படுகின்றன. இரண்டு செயல்பாடுகளையும் ஒரே செயல்பாட்டில் ஒருங்கிணைப்பதன் மூலம், புதிய கலப்பை உழவு செயல்முறையை நெறிப்படுத்துகிறது. களம் முழுவதும் பல தடவைகள் மேற்கொள்ள வேண்டிய தேவையை குறைப்பதுடன், பணிகளுக்கான நேரத்தை குறைக்கிறது.

உழுவதற்கு மற்றும் வரம்புகளை தயார் செய்வதற்கு தனித்தனியான செயல்பாடுகளின் தேவையை நீக்குவதன் மூலம், இந்த மாற்றியமைக்கப்பட்ட கலப்பை ஊழியச் செலவுகள் மற்றும் நேரம் இரண்டையும் கணிசமாகக் குறைக்கிறது. விவசாயிகளுக்கு குறைந்த நேரத்தில் அதிக வேலைகளைச் செய்துகொள்ள முடியுமாக இருப்பதுடன், அவர்களின் வளங்களை மேம்படுத்தல் மற்றும் ஒட்டுமொத்த உற்பத்தித் திறனை அதிகரிக்க முடியும். விவசாயிகளுக்கு தங்கள் வளங்களை மிகவும் வினைத்திறனுடன் ஒதுக்கீடு செய்துகொள்வதற்கும் ஏனைய அத்தியாவசிய பணிகளில் கவனம் செலுத்தவும் வாய்ப்பளித்து ஊழியத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு வரையறுக்கப்பட்ட அல்லது அதிக விலையைக் கொண்ட பிரதேசங்களில் இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.



## 4. பயிற்சி, செயலமர்வுகள் மற்றும் ஆளணி மேம்பாடு

2023 ஆம் ஆண்டில் கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளணி அங்கத்தவர்கள் சில பயிற்சித் திட்டங்களில் பங்குபற்றியதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பட்டப்பின் படிப்புத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளனர்.

**அட்டவணை 32 : ஆளணி அங்கத்தவர்கள் பங்குபற்றிய நிகழ்ச்சித் திட்டங்கள்**

| இல. | ஊழியரின் பெயர் | பதவி | பயிற்சி / செயலமர்வு / நிகழ்ச்சி நடைபெற்ற திகதி | பயிற்சித் திட்டம் மற்றும் நடாத்திய நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | பேராசிரியர் டீ.எம்.சீ.சீ.குணதிலக்க | பேராசிரியர் | 2022.02.10-2023.02.10 | உயர் கல்வி பற்றிய கற்பித்தல் சான்றிதழ் SDC, கொழும்புப் பல்கலைக்கழகம் |
| 2 | திருமதி ஏ.டீ.பீ.சொய்ஸா | உதவி நிதி நிர்வாகி | 2023.07.17-2023.07.28 | நிர்வாகம் மற்றும் நிதி அலுவலர்களுக்கான அனுமதி பற்றிய பயிற்சித் திட்டம் 2023 - UGC |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | திரு. எல்.எம்.ரிப்னாஸ் | விரிவுரையாளர் (தகுதிகாண்) | 2022.02.10-2023.02.10 | உயர் கல்வி பற்றிய கற்பித்தல் சான்றிதழ் SDC, கொழும்புப் பல்கலைக்கழகம் |
| 4 | செல்வி கே.ஜீ.கெட்டிப்பே ஆரச்சி | விரிவுரையாளர் (தகுதிகாண்) | 2022.02.10-2023.02.10<br><br>2024.01.08<br><br>2024.01.30 | உயர் கல்வி பற்றிய கற்பித்தல் சான்றிதழ் SDC, கொழும்புப் பல்கலைக்கழகம்<br>தரச் சான்றிதழ் பற்றிய பயிற்சிப் பட்டறை UOC (இணையவழிப் பங்கேற்பு)<br><br>UOC இன் செனட் மண்டபத்தில் 06 மாத கால தரச் சான்றிதழ் பற்றிய முன்னேற்ற மீளாய்வு பயிற்சிப் பட்டறை |
| 5 | திரு. ஏ.ஜே.எம்.சீ.எம்.சிறிவர்தன | விரிவுரையாளர் (தகுதிகாண்) | 2023.09.04 - 2023.09.16<br><br>2022.02.10- | BRITAE திட்டத்தின் பயிற்சிப் பட்டறை மற்றும் கூட்டம் - இங்கிலாந்தின் மத்திய லங்ஸயர் பல்கலைக்கழகம்<br><br>உயர் கல்வி பற்றிய கற்பித்தல் சான்றிதழ் SDC, கொழும்புப் பல்கலைக்கழகம் |
| 6 | செல்வி யூ.ஆர்.சந்திமாலா | விரிவுரையாளர் (தகுதிகாண்) | 2022.02.10-2023.02.10 | உயர் கல்வி பற்றிய கற்பித்தல் சான்றிதழ் SDC, கொழும்புப் பல்கலைக்கழகம் |
| 7 | திரு. பி.எஸ்.பந்துசேக்கர | விரிவுரையாளர் (தகுதிகாண்) | 2022.02.10-2023.02.10 | உயர் கல்வி பற்றிய கற்பித்தல் சான்றிதழ் SDC, கொழும்புப் பல்கலைக்கழகம் |

**அட்டவணை 33 : 2023 இல் பட்டப்பின் படிப்பு பாடநெறிகள் / டிப்ளோமாவை பூரணப்படுத்திய ஆளணி**

| **இல.** | **ஊழியரின் பெயர்** | **பதவி** | **பயிற்சி / செயலமர்வு / நிகழ்ச்சித் திட்டம் திகதி** | **பயிற்சித் திட்டத்தை நடாத்திய நிகழ்ச்சித் திட்டத்தின் மற்றும் நிறுவனத்தின் பெயர்** |
|---|---|---|---|---|
| 1 | திரு. பி.எஸ்.பந்துசேக்கர | விரிவுரையாளர் (தகுதிகாண்) | 2023 டிசம்பர் | பயிர் அறிவியல் பற்றிய கலாநிதிப் பட்டம், பேராதனை பல்கலைக்கழகம் BOS - பயிர் அறிவியல் |
| 2 | திரு.டப்ளியு.சீ.எம்.எஸ்.மதுசங்க | தற்காலிக செய்முறை விளக்குநர் | 2023 மார்ச் 17 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பொறியியல் பற்றிய கலாநிதிப் பட்டம் |

## 5. புனரமைப்புக்கள் மற்றும் நிர்மாண கருத்திட்டங்கள்

கீழே அட்டவணை 34 ஊடாக நிறுவகத்தில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களின் பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம் காண்பிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 34 : புனரமைப்புக்கள் மற்றும் நிர்மாணக் கருத்திட்டங்கள்**

| இல | கருத்திட்டத்தின் பெயர் | ஏனைய விடயங்கள் |
|---|---|---|
| **2022 இல் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள்** | | |
| 01 | கோழிக்கூடொன்றை நிர்மாணித்தல் | உண்மைச் செலவினம் : 6,120,217.00 ரூபா<br>ஒப்பந்ததாரர் : நேரடி ஊழிய அடிப்படை<br>பௌதிக முன்னேற்றம்: 100%<br>நிதிசார் முன்னேற்றம்: 100% |
| 02 | இழைய வளர்ப்பு ஆய்வுகூடத்தின் உத்தேச அறைகளைப் பிரித்தல் | கருத் திட்டத்தின் ஆரம்ப ஒப்பந்த விலை : 6.7 மில்லியன் ரூபா (VAT வரி இன்றி)<br>உண்மைச் செலவினம் : ரூ.7,509,962.88 (பிடிமானத் தொகை இன்றிய)<br>ஒப்பந்ததாரர் : V.K.Construction<br>பௌதிக முன்னேற்றம்: 100%<br>நிதிசார் முன்னேற்றம்: 95% |
| 03 | நீர் சுத்திகரிப்பு (RO) கட்டமைப்பை தாபித்தல் (500LTR/H) | கருத் திட்டத்தின் ஆரம்ப ஒப்பந்த விலை : 1.6 மில்லியன் ரூபா (VAT வரி இன்றி)<br>உண்மைச் செலவினம் : ரூ.1,641,027.03 ( பிடிமானத் தொகை இன்றிய )<br>ஒப்பந்ததாரர் : Aqua + Solution<br>பௌதிக முன்னேற்றம்: 100%<br>நிதிசார் முன்னேற்றம்: 95% |
| **2023 இல் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள்** | | |
| 05 | வாத்துக்களுக்கான கொட்டகையொன்றை நிர்மாணித்தல் | உண்மைச் செலவினம் : ரூ.110,187.00<br>ஒப்பந்ததாரர் : நேரடி ஊழிய அடிப்படை |
| 06 | விடுதிக்கருகில் 03 தாங்கிகளை வைப்பதற்கான தளமொன்றை நிர்மாணித்தல் | உண்மைச் செலவினம் : ரூ.148,755.00<br>ஒப்பந்ததாரர் : நேரடி ஊழிய அடிப்படை |

## 6. நிதி

### 6.1 நிதிசார் முன்னேற்றம்

**அட்டவணை 35 : மீண்டுடெழும் செலவுகள் பற்றிய விவரம்**

| விடயம் | 2023 (ரூ.) | 2022 (ரூ.) |
|---|---|---|
| ஆளுக்கான வேதனாதிகள் | 87,520,620 | 86,921,328.68 |
| பிரயாணச் செலவு | 216,838.00 | 56,895.00 |
| வழங்கல்கள் | 8,777,848.38 | 6,777,743.89 |
| பராமரிப்பு | 2,505,036.07 | 1,287,087.96 |
| ஒப்பந்த சேவைகள் | 37,812,538.80 | 26,663,639.91 |
| ஏனையவை | 21,854,654.51 | 24,028,430.94 |
| பணிக்கொடை | 3,130,801 | 3,279,285 |
| ஒத்திவைக்கப்பட்ட செலவுகளில் பதிவழிக்கப்பட்ட தொகை | 526,653 | 526,653 |
| **மொத்தம்** | **162,344,990** | **149,541,064** |

## அட்டவணை 36 : மூலதனச் செலவுகள் பற்றிய விவரம்

| விடயம் | 2023 (ரூ.) | 2022 (ரூ.) |
|---|---|---|
| கட்டிடம் மற்றும் அமைப்புக்களை சுவீகரித்தல் மற்றும் மேம்பாடு | 6,404,534.00 | - |
| கட்டிடம் மற்றும் அமைப்புக்கள் புனரமைப்பு | - | 9,313,712.05 |
| ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் சொத்துக்கள் | 168,000.00 | - |
| வாகனங்கள் | - | - |
| ஆய்வு கூடம் மற்றும் கற்பித்தல் | 288,700.00 | 488,888.00 |
| கன்றுகள் இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் | 705,850.00 | 943,544.95 |
| தளபாடங்கள் | 747,260.00 | 31,499.00 |
| அலுவலக உபகரணங்கள் | 8,336,167.00 | 6,972,953.40 |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 5,158,361.00 | 1,908,219.62 |
| மென்பொருள் | 12,500.00 | - |
| **மொத்தம்** | **21,821,372.00** | **19,658,817.02** |

## அட்டவணை 37: கருத்திட்டங்களுக்கான செலவு பற்றிய விவரம் (உள்நாட்டு / வெளிநாட்டு நிதி)

| பெயர் | மொத்தச் செலவின மதிப்பீடு (ரூ). | 2023 ஆம் ஆண்டில் செலவு ரூ. | 2023.12.31 திகதியன்று மொத்த செலவு | பௌதிக முன்னேற்றம் % (2023) |
|---|---|---|---|---|
| **2019 இல் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள்** | | | | |
| ஆட்டுக் கொட்டகை நிர்மாணித்தல் | 5,454,840.51 | 327,034.00 | 4,144,940.20 | 100% |
| **2022 இல் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள்** | | | | |
| கோழிக்கூடொன்றை நிர்மாணித்தல் | 7,938,036.75 | 3,956,221.00 | 6,120,217.00 | 50% |
| இழைய வளர்ப்பு ஆய்வுகூடத்தின் உத்தேச அறைகளைப் பிரித்தல் பணி | 10,790,080.90 | 1,091,298.28 | 7,116,320.78 | 75% |
| நீர் சுத்திகரிப்பு (RO) கட்டமைப்பை தாபித்தல் (500LTR/H) | 1,579,600.00 | 1,562,047.05 | 1,562,047.05 | 100% |
| **உப மொத்தம்** | 25,762,558.16 | 6,936,600.33 | 18,943,525.03 | |
| **முழு மொத்தம்** | | **6,936,600.33** | **18,943,525.03** | |

## அட்டவணை 38 : நிதிசார் முன்னேற்றம் பற்றிய விவரம் (ஈட்டிய வருமானம்)

| | 2023 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு (ரூ.) | 2023 ஆம் ஆண்டில் சேகரிப்பு (ரூ.) | (குறைவு)/மேலதிகம் (ரூ.) |
|---|---|---|---|
| IARS - சான்றிதழ் பாடநெறிகள் | 59,164,000 | 73,017,875 | 13,853,875 |
| ஏனைய வருமானம் | 973,000 | 1,148,524 | 175,524 |
| பண்ணை மற்றும் கன்றுகள் விற்பனை | 15,504,000 | 37,647,079 | 22,143,079 |
| யோகட் விற்பனை | - | 603,105 | 603,105 |
| ஐஸ் கிறீம் வருமானம் | - | 112,720 | 112,720 |
| விடுதிக் கட்டணம் | 1,239,000 | 7,408,983 | 6,169,983 |
| வட்டி வருமானம் | 300,000 | 2,650,050 | 2,350,050 |
| **மொத்தம்** | **77,180,000** | **122,588,336** | **45,408,336** |

**அட்டவணை 39 : நிதிசார் செயற்திறன் பகுப்பாய்வு**

| விடயம் | சூத்திரம் | ஒரு மாணவருக்கான செலவு (ரூ.) 2023 | ஒரு மாணவருக்கான செலவு (ரூ.) 2022 | ஒரு மாணவருக்கான செலவு (ரூ.) 2021 | ஒரு மாணவருக்கான செலவு (ரூ.) 2020 |
|---|---|---|---|---|---|
| ஒரு மாணவருக்கான மீண்டெழும் செலவு (RE) | மீண்டெழும் செலவு / மாணவர் எண்ணிக்கை | 162,344.99 | 109,407.77 | 115,474.30 | 156,174.10 |
| ஒரு மாணவருக்கான மூலதனச் செலவு (CE) | மூலதனச் செலவு / மாணவர் எண்ணிக்கை | 21,821.37 | 13,484.36 | 99,107.79 | 233,948.07 |
| **மொத்தம்** | | **184,166.46** | **122,892.13** | **214,582.09** | **390,122.17** |

## 6.2 உலக வங்கி நிதியுதவித் திட்டங்கள்

**கருத்திட்டத்தின் பெயர்** : உலக வங்கி நிதி வழங்கப்படும் AHEAD திட்டம் / ELTA ELSE திட்டம்

**கருத்திட்டத்தின் தலைப்பு** : கலப்புக் கற்றல் ஊடாக ஆங்கில மொழியை மேம்படுத்தல்

**கருத்திட்டம் பற்றிய சுருக்கம்:** UCIARS இன் ஆங்கில மொழி மேம்படுத்தல் அல்லது ஆங்கில மொழியைக் கற்றல் வசதிகளை மேம்படுத்தல்.

**கருத்திட்டத்தின் இலக்குகள் / நோக்கங்கள்:**

நோக்கம்: கலப்புக் கற்றல் ஊடாக ஆங்கில மொழியை மேம்படுத்தல்

**இலக்குகள்:**
1. சகல கல்வித் தவணைகளிலும் ஆங்கில மொழியை பாடமொன்றாக உட்சேர்த்தல்.
2. கணனியை அடிப்படையாகக்கொண்ட ஆங்கில மொழி ஆய்வுகூடமொன்றை மேம்படுத்தல்.
3. சமூக மூல ஒன்றியங்களை நடாத்துதல்.
4. மாணவர்களின் ஆங்கில மொழிக்கான புள்ளிகளை அதிகரித்தல்.

கருத்திட்டத்தின் காலப் பகுதி : 2 வருடங்கள்

கருத்திட்டத்தின் பெறுமதி (மில்லியன்) – வருடங்களுக்கமைய / ஏனைய விதத்தில் : 15 மில்லியன் ரூபா

**2023.12.31 ஆம் திகதியன்று கருத்திட்டத்தின் முன்னேற்றம்**

**அட்டவணை இல. 40 : கருத்திட்டத்தின் KPI பட்டியல் மற்றும் 2023 திசெம்பர் 01 ஆம் திகதியன்று பெற்றுக்கொண்டுள்ள KPI இன் விபரம்**

| No | KPI | Total Promised | Total achieved |
|---|---|---|---|
| 1 | அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஆங்கில மொழி (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்துடன்) பாடநெறிகளின் எண்ணிக்கை | 6 | 6 |
| 2 | ஆங்கில மொழியில் கற்பவர்களுக்கான கற்றல் வழிகாட்டிகள் / உசாத்துணைகளின் எண்ணிக்கை | 6 | 6 |
| 3 | ஆங்கில மொழிப் பாடநெறியின் மதிப்பீட்டின் ஒரு பகுதியாக நடத்தப்படும் ஊடாடும் சமூகம் சார்ந்த ஒன்றியங்களின் எண்ணிக்கை | 6 | 6 |

**பெறுபேறுகள்;**

1. வலையமைப்புக்குட்படுத்தப்பட்ட 25 மேசைக் கணினிகள் (டெஸ்க்டாப்), பல நோக்கு பிரதியெடுத்தல் இயந்திரம், திரையுடனான மல்டிமீடியா ப்ரொஜெக்டர், ஒலி அமைப்பு, குரல் பதிவு மற்றும் கேமரா ஆகியவற்றைக் கொண்ட கணினி அடிப்படையிலான ஆங்கில ஆய்வுகூடத்தை அமைத்தல்.

2. 1 ஆம் ஆண்டு, 2 ஆம் ஆண்டு மற்றும் 3 ஆம் ஆண்டு உட்பட 6 செமஸ்டர்களில் ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்ட திருத்தப்பட்ட பாடத்திட்டம்.

3. கணினி அடிப்படையிலான மொழி கற்றல் மென்பொருளை (Wordsworth) புதிய ஆய்வகத்திலும் தற்போதுள்ள கணினி ஆய்வகத்திலும் நிறுவுதல்.

**7. பேண்தகு அபிவிருத்தியை அடிப்படையாகக்கொண்ட எதிர்கால எதிர்பார்ப்புக்கள் சம்பந்தமான அறிக்கை**

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகம் மூலோபாய முகாமைத்துவத் திட்டத்தை தயாரிக்கும்போது பேண்தகு அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் விதத்தில் அதனைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய 2021 - 2025 வரையான காலப் பகுதிக்காக தயாரிக்கப்பட்ட உபாய வழி முகாமைத்துவத் திட்டத்தின் மற்றும் 2023 செயல் திட்டம் கீழ் குறிப்பிடப்படும் நோக்கங்கள் சூழல் மீது குறைந்தளவு எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் மற்றும் சூழலைப் பாதுகாக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன.

**நோக்கம் 01** : அத்தியாவசிய தரங்களைக் கொண்ட பட்டதாரிகளை உருவாக்குவதனை அதிகரித்தல்.

**நோக்கம் 02**: மேம்படுத்தப்பட்ட வர்த்தக ரீதியிலான கூட்டாண்மை மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு

**நோக்கம் 03**: மேம்படுத்தப்பட்ட கல்விசார் தோற்ற வடிவம் (Academic profile) மற்றும் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கலின் தாக்கம்

**நோக்கம் 04**: மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஏனைய வசதிகள்

**நோக்கம் 05**: மேம்படுத்தப்பட்ட நிர்வாகம் மற்றும் நிதி முகாமைத்துவம் / ஒழுக்கம் மற்றும் நிதிசார் தங்கியிருத்தலைக் குறைத்தல்

UCIARS என்பது விவசாயத் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக்கொண்ட நிறுவகமொன்றாக இருப்பதனால் சூழலைப் பாதுகாத்தல் மற்றும் பிரஜைகளுக்கு விவசாயம் பற்றிய முன்மாதிரி மீது கவனத்தைச் செலுத்துகின்றது.

அதற்கமைய 2023 ஆம் ஆண்டில் நிறுவகத்தினால் சூழல் பாதுகாப்பு மற்றும் பேண்தகு (நிலையான) அபிவிருத்திக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கீழே சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

1. அனைவருக்கும் மிகவும் நியாயமான மற்றும் ஏற்பதற்கு முடியுமான பாடநெறிக் கட்டணத்தின் கீழ் தேசியப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுவதற்கான வாய்ப்புக் கிடைக்காத விவசாயிகளுக்குப் போன்றே உயர் தரத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் விவசாயத் தொழில்நுட்பப் பட்டத்தை வழங்குதல்.

2. நிறுவனத்தினால் கட்டணம் அறவிடப்படும் பாடநெறிகள் நடாத்தப்படுவதனால், UCIARS விடுதியில் தங்கியிருக்கும் மாணவர்களுக்கு மிகக் குறைந்த நாளாந்தக் கட்டணம் / மாதாந்தக் கட்டணத்தின் கீழ் தங்குமிட வசதிகள் வழங்கப்படுவதுடன், அதனால் அனைத்து மாணவர்களுக்கும் செலவை ஏற்க முடியுமாக இருக்கும்.

3. பட்டத்தைப் பயிலுவதற்கு வயது தடையாக இல்லாமையினால் வாழ்க்கை காலம் பூராவும் கற்றல் எண்ணக்கருவை உறுதி செய்கின்றது.

4. சூரிய சக்திப் பயன்பாடு (மின்சாரத்தை மீதப்படுத்திக்கொள்வதற்காக யானை தடுப்பு வேலியின் மற்றும் வெளிப்புற ஒளிக்காக சூரிய பனல் பொருத்தப்பட்டுள்ளது.)

5. அலுவலக நடவடிக்கைகளின்போது காகிதங்களைக் குறைத்தல் (மின்னஞ்சலை அதிகமாகப் பயன்படுத்தல்) மற்றும் ஒரு பக்க காகிதங்களை (one side papers) மீண்டும் பயன்படுத்தல் மற்றும் அநேகமான கூட்டங்களை இணையவழியில் நடாத்துதல்.

6. நிறுவகத்தின் நலன்புரிச் சங்கத்தின் உணவகத்தினூடாக மாணவர்களுக்கு மற்றும் ஆளணி அங்கத்தவர்களுக்கு போசாக்கான உணவை நியாயமான விலையில் வழங்குதல்.

7. நிறுவகத்தின LMS நிர்வாகிகளினால் LMS இல் காணப்படும் கோப்புக்களை மறுசீரமைத்து கொழும்புப் பல்கலைக்கழக முறைமையில் காணப்படும் கோப்பு நெரிசலை தவிர்த்து இலகுவாக பிரவேசிக்க முடியுமான வகையில் இற்றைப்படுத்தப்பட்டது.

8. நபர்கள் மற்றும் நிறுவகம் சம்பந்தமாக தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக துரித அணுகலைப் பெற்றுக்கொடுப்பதனூடாக மாணவர்களுக்கு மற்றும் ஆளணிக்கு உதவி புரிவதற்காக முகாமைத்துவ தகவல் முறைமையொன்று (MIS) அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முறைமையானது தற்போது மிகவும் வரையறுக்கப்பட்ட ஆளணி அங்கத்தவர்களைக் கொண்டுள்ள நிறுவகத்தின் பணிகளை துரிதப்படுத்துவதற்கு மிகவும் உதவியாக இருக்கின்றது

9. UCIARS பண்ணையானது பலநோக்கு உற்பத்திப் பிரிவொன்றாக இருப்பதுடன் அது பட்டத் தேர்வுநாடிகளுக்கு செய்முறை வாய்ப்புக்களை வழங்குகின்றது. கல்வியலாளருக்களுக்கு ஆராய்ச்சி வாய்ப்புக்களை வழங்குகின்றது. விவசாயிகள் மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு நவீன தொழில்நுட்ப கண்காட்சிப் பிவொன்றாகவும் செயற்படுவதுடன் அது நிறுவகத்திற்கு வருமானத்தை ஈட்டிக்கொடுக்கின்றது.

10. நிறுவகம் மற்றும் விவசாயிகளிடையே இரு வழி தொடர்பாடல் பொறிமுறையொன்றை ஏற்படுத்தும் நோக்கில் UCIARS உடன் இணைக்கப்பட்டுள்ள பிரிவொன்று தாபிக்கப்பட்டுள்ளது. விவசாயம் சார்ந்த தகவல்களை விரிவாக்கல், நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட தொழில்நுட்ப நேரடி மொழிபெயர்ப்பு, விவசாயிகள் முகங்கொடுக்கும் தொழில்நுட்பம் சார்ந்த பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் விவசாயக் கைத்தொழிலுடன் தொடர்புடைய புதிய அனுபவங்களை விவசாயிகள், தொழில் முயற்சியாளர்கள், தனியார் பிரிவு மற்றும் மாணவர்களுடன் பகிர்ந்துகொள்ளல் இந்த சிறப்புப் பிரிவுகளை அமைப்பதன் நோக்கமாகும்.

11. மாணவர்கள் மற்றும் நிறுவக ஆளணியின் சுத்தமான குடிநீர் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்காக நீர் சுத்திகரிப்பு (RO) கட்டமைப்பொன்று தாபிக்கப்பட்டது.

12. பிரதேசத்தில் போட்டோ பிரதியெடுத்தல், அச்சிடல், தட்டச்சு செய்தல், புத்தகம் கட்டுதல் போன்ற வசதிகள் இல்லாமையினால் UCIARSஇன் நலன்புரி சங்கத்தினால் போட்டோ பிரதியெடுப்பதற்கான நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டது. UCIARS மாணவர்களுக்குப் போன்றே பிரதேசவாசிகளுக்கு நியாயமான விலையில் பாரிய ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது.

சூழல் பாதுகாப்பு மற்றும் பேண்தகு (நிலையான) அபிவிருத்திக்காக எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

1. நிறுவகத்தின் 40 ஏக்கர் பண்ணையை முழுமையாக அபிவிருத்தி செய்ததன் பின்னர் சேதனப் பயிர்ச் செய்கை மற்றும் வர்த்தக மட்டத்தில் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்வதனூடாக மக்களுக்கு சேதன உணவு வகைகளை விற்பனை செய்வதன் ஊடாக சுகாதாரம் மற்றும் உடல் ஆரோக்கிய நிலைமையை மேம்படுத்தல் மற்றும் போசாக்கை மேம்படுத்தல்.
2. விவசாய தொழில்நுட்ப ஆராய்ச்சி ஊடாக விவசாய தொழில் முயற்சியாளர்களுக்கு புதிய தொழில்நுட்ப முறைகளை அறிமுகஞ் செய்தல்.
3. சூரிய சக்திப் பயன்பாட்டை முழு நிறுவனத்திற்கும் அறிமுகஞ்செய்வதனூடாக மின்சாரத்தை மீதப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன் முதலாவது கட்டமாக புதிய இழைய வளர்ப்பு ஆய்வுகூடத்திற்கு Solar PV கட்டமைப்பை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

4. முழு நிறுவனத்திற்கும் சுத்திகரிக்கப்பட்ட நீரைப் பெற்றுக்கொள்ளும் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனூடாக குடிநீரை வெளியிலிருந்து பெற்றுக்கொள்வதற்கான செலவு குறைக்கப்படுவதுடன் நீரும் பாதுகாக்கப்படுகின்றது.

5. நிலப்பரப்பு சூழல் கட்டமைப்பை பாதுகாக்க முடியுமான வகையில் மண்ணை பாதுகாக்க முடியுமான பயிர்களை அதிகமதிகமாக அறிமுகஞ்செய்தல்.

6. நிறுவன வளவினுள் (பண்ணை உட்பட) அனைத்து அத்தியாவசிய இடங்களுக்கும் இணையத்தள வசதிகளை வழங்கி நிறுவனத்தின் மாணவர்கள் உட்பட ஊழியர்களுக்கு புதிய தொழில்நுட்பத்திற்குள் பிரவேசிப்பதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொடுத்தல்.

7. நிறுவனத்தின் நிர்வாக நடவடிக்கைகளின்போதும் வைபவங்களின்போதும் சூழலை மாசடையச் செய்யும் நடவடிக்கைகளை முடியுமானவரை தவிர்த்தல்.

8. பசுமை சுற்றுச்சூழலை உருவாக்குவதற்காக முடியுமானவரை நிறுவனத்தினுள் விவசாய செய்முறை செயற்பாடுகளின்போது மர நடுகையில் ஈடுபடுத்தல்.
9. வலு சக்தி மற்றும் நீர் வளத்தை பொருளாதார ரீதியில் நன்மை பயக்கும் வகையில் பயன்படுத்தல் மற்றும் பன்றிகளை வளர்ப்பதற்காக அகற்றப்படும் உணவுகளைப் பயன்படுத்தல்.
10. ஆளணி அங்கத்தவர்களுக்கு மற்றும் மாணவர்களுக்கு போதுமானளவு தங்குமிட வசதிகளை வழங்குதல்.

# நிதிக் கூற்றுக்கள் - 2023

கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞானக் கற்கைகள் நிறுவகம்

2024.02. 28

பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,

இலக்கம்: 306/72,

பொல்தூவ வீதி,

பத்தரமுல்லை.

Iah>

**நிதிக் கூற்றுக்கள் - 2023**

கீழ் குறிப்பிடப்படும் கூற்றுக்களுடன் 2023 ஆம் ஆண்டிற்காக கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞானக் கற்கைகள் நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்களை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

01. 2023.12.31 திகதியன்று நிதி நிலைமை பற்றிய கூற்று
02. 2023.12.31 திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான உற்பத்தி மற்றும் வர்த்தகம் பற்றிய கூற்று
03. 2023.12.31 திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்திறன் பற்றிய கூற்று
04. 2023.12.31 திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான பங்கு மாற்றங்கள் பற்றிய கூற்று
05. 2023.12.31 திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று
06. பொறுப்புக்கள் பற்றிய கூற்று
07. நிதிக் கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்கள்.

நன்றி

**பேராசிரியர் டீ.எம்.சீ.சீ.குணதிலக்க**
பணிப்பாளர்
கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞானக் கற்கைகள் நிறுவகம்.

**விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞானக் கற்கைகள் நிறுவகம்**
**கொழும்பு பல்கலைக்கழகம்**

**2023 டிசம்பர் 31 திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான**
**பொறுப்புக்கள் பற்றிய கூற்று**

01 ஆம் பக்கம் முதல் 08 ஆம் பக்கம் வரையிலான பக்கங்களில் கணக்கீட்டுக் கொள்கை மற்றும் 09 முதல் 24 ஆம் பக்கம் வரையிலான பக்கங்களில் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களில் அத்தியாவசிய பங்கினை வகிக்கின்றன. இந்த நிதிக் கூற்றை தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பதற்கு பணிப்பாளர் சபை கடமைப்பட்டுள்ளது. இந்த நிதிக் கூற்று பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அவர்கள் தமது கையொப்பத்தை இட்டுள்ளனர்.

**பேராசிரியர் டீ.எம்.சீ.சீ.குணதிலக்க**
பணிப்பாளர்
கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞானக் கற்கைகள் நிறுவ

**முகாமைத்துவ சபையின் அங்கத்தவர்கள்**

| **பெயர்** | | **கையொப்பம்** |
|---|---|---|
| திரு.எச்.பீ.சுமணசேக்கர | மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், ஹம்பாந்தோட்டை | |
| கலாநிதி என்.பீ.விதாணபத்திரண | சிரேஷ்ட விரிவுரையாளர்/ பிரிவுத் தலைவர், கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞானக் கற்கைகள் நிறுவகம் | |

## உள்ளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| 1. அறிமுகம் | 143 |
| 2. நிதிக் கூற்றுக்கள் – நிதி நிலைமை பற்றிய கூற்று | 145 |
| 3. நிதிக் கூற்றுக்கள் - உற்பத்தி, வணிக மற்றும் நிதி நிலைமை பற்றிய கூற்று | 147 |
| 4. பங்கு மாற்றங்கள் பற்றிய கூற்று | 149 |
| 5. நிதிக் கூற்று – காசுப் பாய்ச்சல் கூற்று | 151 |
| 6. நிதிக் கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்கள் | 156 |

## அறிமுகம்

விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகத்தை தாபித்ததன் மூலம் ''தகவல் தொழில்நுட்பத்துடன்கூடிய விவசாய தொழில்நுட்பம் சம்பந்தமான நவீன அறிவை வழங்குவதனூடாக சிறந்த தொழிலொன்றாக இலங்கையின் விவசாயக் கைத்தொழில் துறையைக் கட்டியெழுப்புவதற்காக இலங்கை அரசாங்கத்தின் சார்பில் உறுதிப்படுத்தப்பட்ட யுகமொன்றுக்காக முன்னணி வகித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.''

கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞானக் கற்கைகள் நிறுவகம் (UCIARS) (இங்கு இதனகத்துப் பின்னர் நிறுவகம் எனக் குறிப்பிடப்படும்) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24 'அ' ஆவது பிரிவு மற்றும் 18 ஆவது பிரிவின் கீழ் மற்றும் 2008 இன் 02 ஆம் இலக்க கொழும்புப் பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞானக் கற்கைகள் நிறுவகச் சட்டத்தின் கீழ் வயது, வாய்ப்பு, காலம் மற்றும் கல்விப் பின்னணி போன்ற வரையறைகளின் ஊடாக விவசாயம் / கமத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு உயர் கல்விக்கான வாய்ப்பை வழங்குவதற்காக கற்றல் பற்றிய கலப்பு தொலைக் கல்வி முறையைக் கொண்ட நிறுவனமொன்றாகத் தாபிக்கப்பட்டுள்ளது. 24 'அ' பிரிவின் கீழான கட்டளை 2008 ஆகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படுகின்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் இந்த நிறுவகம் 2000 ஆம் ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த ஹம்பாந்தோட்டை வெலிகத்த மாகம்புர விவசாயத் தொழில்நுட்பம் மற்றும் சமூக சேவைகள் நிலையத்தில் தாபிக்கப்பட்டது. நிறுவனம் கொழும்பில் இருந்து 250 கி.மீ. தூரத்தில் கொழும்பு – கதிர்காமம் வீதிக்கு மிக அருகாமையில் அமைந்துள்ளது. பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களினால் இறுதிப் பயனர்களுக்கு நேரடியாக தொழில்நுட்பம் / அறிவு மற்றும் ஆற்றல்களை பரிமாறிக்கொள்ளல் மற்றும் பிராந்தியத்தில் விவசாயம் மற்றும் விவசாயக் கைத்தொழிலின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக பிரஜைகளுடன் நெருங்கிய ஒத்துழைப்பு ரீதியிலமைந்த தொடர்பினை கட்டியெழுப்பிய நிறுவனமாகும். இதன் வரலாறு 1998 ஆம் ஆண்டு வரை முன்னோக்கிச் செல்கின்றது.

விவசாயம் மற்றும் விவசாயத் தொழில்நுட்பம், விவசாயத் தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞானப் பயிற்சி சம்பந்தமான உயர் கல்வித் துறையில் தற்போது ஈடுபட்டுள்ளவர்களுக்கு அறிவைப் பெற்றுக் கொடுத்தல், அறிவை விருத்தி செய்வதற்கு மற்றும் மேம்படுத்துவதற்கு இந்த நிறுவனத்திற்கு அதிகாரம் உண்டு. உயர் கல்விக்கான வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கான கனவை ஒருபோதும் அடைந்துகொள்ள முடியாத விவசாயிகளுக்கு கலப்புக் கற்றல் முறையொன்றின் ஊடாக கல்வியைப் பெற்றுக்கொடுத்து மாற்றமடைந்துவரும் தனி நபர் மற்றும் சமூகத் தேவைகளுக்கு இந்த நிறுவனத்தினால் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். அவர்களுக்கு உயர் கல்வியைப் பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்பு மற்றும் ஆற்றல் இருந்தபோதிலும் அவர்களது தனிப்பட்ட, குடும்ப பொருளாதாரப் பின்னணியின் காரணத்தினால் வாய்ப்புக்களைப் பயன்படுத்தாதிருக்கின்றனர். நுழைவுக்கான தேவைகள் மற்றும் பாடநெறியைத் தெரிவு செய்தல் என்பன நெகிழ்வுத் தன்மையுடையதாக இருப்பதனால் கிராமப்புறங்களில் வறுமை நிலையில் வாழும் பயிலுனர்களுக்கு வசதியான சந்தர்ப்பத்தில், வசதியான இடத்தில் கல்வியைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அவர்களது கல்வி சார்ந்த, தொழில் சார்ந்த மற்றும் சமூக எதிர்பார்ப்புக்களை புரிந்துணர்ந்து கொள்வதற்காக நவீன தகவல் தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்தி தரமான உயர் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கு இதனூடாக முடியுமாகுமென நிறுவகம் சுட்டிக் காட்டுகின்றது.

| புறத்தொதுக்குதல்கள் | - | (551,256) | (842) | - | - | - | | (552,098) | (170,278) | (722,375) | |
| **2023 டிசம்பர் 31 திகதியன்று** | 1,950,993 | 22,835,080 | 27,115,527 | 222,000 | 643,498 | 707,500 | 19,903,164 | 73,377,761 | 633,240,381 | 706,618,142 | |
| | | | | | | | | | | - | |
| **திரட்டிய தேய்யமானம்** | | | | | | | | | | - | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **தேய்மான வீதம்** | 10% | 10% | 10% | 10% | 10% | 20% | | | | | |
| 2023 ஜனவரி 01 ஆம் திகதியன்று மீதி | 120,071 | 1,025,848 | 2,027,525 | 111,182 | 411,278 | 223,500 | | 3,919,404 | 165,427,774 | 169,347,178 | |
| தயாரிக்கப்பட்ட மீதி | | | | | | | | - | 4,745,314 | 4,745,314 | |
| தயாரிக்கப்பட்ட மீதி | | | | | | | | | | - | |
| பிரிவுக்குள் மாற்றங்கள் | | | | | | | | | - | - | |
| தேய்மானத்தை நீக்கல் | | | | | | | | | (2,193,221) | (2,193,221) | |
| | 120,071 | 1,025,848 | 2,027,525 | 111,182 | 411,278 | 223,500 | - | 3,919,404 | 167,967,865 | 171,887,269 | |
| | | | | | | | | - | - | - | |
| புறத்தொதுக்குதல்கள் | - | (59,178) | (84) | - | - | - | | (59,262) | (55,189) | (114,450) | |
| ஆண்டின் தேய்மானம் | 141,589 | 2,014,253 | 2,495,253 | 22,200 | 64,350 | 139,346 | | 4,876,991 | 34,042,619 | 38,919,610 | |
| **2023 டிசம்பர் 31 திகதியன்று** | **261,660** | **2,980,923** | **4,522,694** | **133,382** | **475,628** | **362,846** | **-** | **8,737,133** | **201,955,295** | **210,692,428** | |
| | | | | | | | | - | - | - | |
| **2023 டிசம்பர் 31 திகதியன்று தேறிய ஏட்டுப் பெறுமதி** | **1,689,333** | **19,854,156** | **22,592,833** | **88,618** | **167,870** | **344,654** | **19,903,164** | **64,640,628** | **431,285,085** | **495,925,714** | |

**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் - 2023 (மீதிப் பகுதி)**

| குறிப்பு - 09 | 2023 | 2022 |
|---|---|---|
| **ஒத்திவைக்கப்பட்ட செலவுகள்** | **ரூ.** | |
| மின்மாற்றி - இலங்கை மின்சார சபை | - | 259,860 |
| மின் உபகரணங்கள் | 303,478 | 570,271 |
| | **303,478** | **830,131** |

| குறிப்பு - 10 | 2023 | 2022 |
|---|---|---|
| **அட்டுறு செலவுகள்** | **ரூ.** | |
| மின்சாரம் | 1,127,876 | 618,026 |
| நீர் | 276,311 | 24,846 |
| இணையத்தள சேவைகள் | 368,639 | 737,278 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 12,153 | - |
| ஊழியர் சேமலாப நிதியம் | 81,018 | - |
| சம்பளம் மற்றும் வேதனங்கள் | 54,095 | - |
| விடுமுறை தின சம்பளம் | - | 24,098 |
| உள்நாட்டு பிரயாணச் செலவு | 93,800 | 25,610 |
| தொலைபேசி | 35,150 | 27,829 |
| பல்கலைக்கழக சேமலாப நிதியம் | - | - |
| மேலதிக நேர வேலை | 105,761 | 102,857 |
| பரீட்சைக் கட்டணம் | 383,566 | 195,334 |
| ஆலோசனை சேவைக் கட்டணம் | 55,000 | 515,363 |
| வருகைதரு விரிவுரையாளர்களுக்கான கட்டணம் | 166,500 | 193,500 |
| சுத்திகரிப்பு சேவைகள் | 655,600 | 1,510,932 |
| அச்சிடல் மற்றும் விளம்பரம் | - | 124,890 |
| பாதுகாப்பு சேவைகள் | 462,023 | 460,350 |
| பயிலுனர்களுக்கான படிகள் VTA | 72,350 | 9,500 |
| பட்டப் பாடநெறிக்கான செலவுகள் | - | 3,806 |
| மொழிபெயர்ப்புக் கட்டணம் | - | 62,580 |
| கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகள் | 405,138 | 152,450 |
| பண்ணை அபிவிருத்தி செலவுகள் - மாதுளை | - | 166,400 |
| பண்ணை மற்றும் நீர்ப்பாசன செலவுகள் | 277,426 | 130,000 |
| ஏனைய மீண்டெழும் செலவினங்கள் | 25,000 | - |
| ஏனைய வழங்கல்கள் | 49,250 | - |
| விசேட சேவைகளை வழங்கல் | 87,000 | 131,500 |
| வாகனங்கள் (பழுதுபார்ப்பு) | - | 21,050 |
| அலுவலக உபகரணங்கள் (பழுதுபார்ப்பு) | 23,287 | - |
| அனுமதிப் பத்திரங்கள் மற்றும் காப்புறுதிக் கட்டணங்கள் | 977 | 114,893 |

| | | |
|---|---|---|
| களப் பயணங்களுக்கான செலவுகள் | 1,250 | 1,750 |
| போட்டோ பிரதிகள், காற்று சீராக்கிகள் மற்றும் மின் தூக்கிகள் | 10,010 | 10,010 |
| கணக்காய்வாளர் கட்டணம் | 826,944 | 336,000 |
| தபால் கட்டணம் | 550 | 2,197 |
| கன்றுகள் விற்பனைச் செலவு | - | 3,825 |
| கட்டிடங்கள் மற்றும் அமைப்புக்கள் (பராமரிப்பு) | 131,785 | 227,500 |
| வலையமைப்பு மூலப்பொருட்கள் | - | 4,500 |
| சீருடைக்கான செலவுகள் | - | 99,710 |
| புகையிரத ஆணைச்சீட்டுகள் | 21,250 | 5,075 |
| நிர்மாணிக்கப்பட்டுவரும் பன்றிக் கொட்டகை | - | 97,500 |
| கட்டிடங்கள் மற்றும் அமைப்புக்கள் | 216,749 | 552,546 |
| நீர் வடிகட்டல் அமைப்பு | 78,980 | 1,641,027 |
| புனரமைப்பு மற்றும் நீட்டிப்புக்கள் | 393,642 | 1,647,663 |
| நீர்ப்பாசனக் கட்டமைப்புக்கள் | 286,025 | 286,025 |
| அட்டுறு சம்பள செலவுகள் | 1,716,209 | 2,229,065 |
| | **8,501,315** | **12,497,482** |

| **குறிப்பு - 11** | **2023** | **2022** |
|---|---|---|
| **ஏனைய நடைமுறை பொறுப்புக்கள்** | **ரூ.** | |
| செலுத்த வேண்டிய வரி | 8,305 | 8,880 |
| ஊழியர் கடன் | 7,389 | 7,389 |
| ஏனைய பொறுப்புக்கள் | 25,881 | 33,081 |
| ஏலம் - பாதுகாப்பு (செலுத்த வேண்டிய) | 131,960 | 106,580 |
| முற்பணம் செலுத்தல் - பாடநெறிக் கட்டணம் | 6,352,779 | 11,046,479 |
| முற்பணம் செலுத்தல் - விடுதிக் கட்டணம் | 1,537,115 | 28,300 |
| இனங்காணப்படாத வருமானம் | 128,910 | 253,310 |
| ஏனைய முற்பணம் பெறுவனவு வருமானம் | 573,305 | - |
| | **8,765,644** | **11,484,019** |

| குறிப்பு - 12 | 2023 | 2024 |
| --- | --- | --- |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | **ரூ.** | |
| கம நல நம்பிக்கை நிதியம் | - | 75,000 |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடு | 13,784,405 | 10,224,514 |
| மீளச் செலுத்தும் வைப்புக்கள் | 10,000 | 10,000 |
| மீளச் செலுத்த வேண்டியவை - கொழும்புப் பல்கலைக்கழக அளிப்புக்கள் | 4,600,000 | 5,000,000 |
| | **18,394,405** | **15,309,517** |

| குறிப்பு -13 | 2023 | 2024 |
| --- | --- | --- |
| **ஈட்டிய வருமானம்** | **ரூ.** | |
| சான்றிதழ் பாடநெறி - IARS | 73,017,875 | 36,425,291 |
| ஏனைய வருமானம் | 1,148,524 | 684,053 |
| பண்ணை மற்றும் நீர்ப்பாசனம் | 11,073,064 | 10,128,846 |
| யோகட் விற்பனை வருமானம் | 603,105 | 138,970 |
| ஐஸ் கிறீம் வருமானம் | 112,720 | - |
| விடுதிக் கட்டணம் | 7,408,983 | 3,958,320 |
| | **93,364,270** | **51,335,480** |

| குறிப்பு - 14 | 2023 | 2024 |
| --- | --- | --- |
| வட்டி வருமானம் | **ரூ.** | |
| இடர் கடனுக்கான வட்டி | 88,073 | 86,829 |
| வட்டி வருமானம் (REPO) | - | 155,827 |
| வட்டி வருமானம் (ஏனையவை) | 2,561,977 | 1,577,653 |
| | **2,650,050** | **1,820,310** |

| குறிப்பு 15 | 2023 | 2022 |
| --- | --- | --- |
| செலாவணி அல்லாத பரிவர்த்தனைகள் மூலமான வருமானம் - மூலதனம் | **ரூ.** | **ரூ.** |
| படிகள் | | |
| அரசாங்க உதவி | - | 12,500,000 |
| AHED ELTSE அளிப்பு | 8,175,000 | 3,559,890 |
| AHEAD ICE அளிப்பு | 2,183,850 | - |
| | **10,358,850** | **16,059,890** |
| பரிசுகள் மற்றும் அன்பளிப்புக்கள் | | |
| UCSC அன்பளிப்பு | 6,004 | - |
| | **6,004** | **-** |

| செலாவணி அல்லாத பரிவர்த்தனைகள் மூலமான வருமானம் - மீண்டெழும் | **2023** | **2022** |
|---|---|---|
| படிகள் | **ரூ.** | **ரூ.** |
| அரசாங்க உதவி | 69,000,000 | 101,421,000 |
| AHED ELTSE அளிப்பு | 291,500 | 212,510 |
| | **69,291,500** | **101,633,510** |
| பரிசுகள் மற்றும் அன்பளிப்புக்கள் | | |
| SLT மொபிடெல் | 25,000 | - |
| கம நல சேவை - இலவசமாக பசளை வழங்கல் | 24,000 | - |
| | **49,000** | **-** |

| **குறிப்பு - 16** | 2023 | 2022 |
|---|---|---|
| **தனிப்பட்ட படிகள்** | **ரூ.** | |
| சம்பளம் மற்றும் வேதனம் | 61,622,844 | 61,204,981 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 1,381,028 | 504,756 |
| பல்கலைக்கழக சேமலாப நிதியம் (UPF) | 3,311,263 | 3,432,985 |
| ஓய்வூதியம் | 2,233,420 | 2,001,478 |
| ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை | 1,370,927 | 1,347,640 |
| விடுமுறை தின சம்பளம் செலுத்தல் | 56,693 | 56,498 |
| மேலதிக நேரப் படி | 739,876 | 812,963 |
| | **70,716,050** | **69,361,300** |

| **குறிப்பு - 17** | 2023 | 2022 |
|---|---|---|
| **பிரயாணச் செலவுகள்** | **ரூ.** | |
| வெளிநாட்டு | - | - |
| உள்நாட்டு | 216,838 | 56,895 |
| | **216,838** | **56,895** |

| **குறிப்பு - 18** | 2023 | 2022 |
|---|---|---|
| **வழங்கல்கள்** | **ரூ.** | |
| இயந்திரம் மற்றும் மின்சார உபகரணங்கள் | 2,477,231 | 940,434 |
| எழுது பொருட்கள் மற்றும் அலுவலகத் தேவைகள் | 2,101,441 | 2,041,251 |
| சீருடைகள் | 21,380 | 752,570 |

| | | |
|---|---|---|
| எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி | 2,208,968 | 2,424,172 |
| நுகர்வுப் பொருட்கள் மற்றும் கண்ணாடிப் பொருட்கள் | 1,094,360 | 204,128 |
| ஏனையவை | 865,633 | 351,562 |
| இரசாயனப் பொருட்கள் | 8,835 | 63,627 |
| | **8,777,848** | **6,777,744** |

| **குறிப்ப - 19** | 2023 | 2022 |
|---|---|---|
| **பராமரிப்புச் செலவுகள்** | ரூ. | |
| பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 805,910 | 406,793 |
| மோட்டார் வாகனங்கள் | 689,228 | 324,246 |
| கட்டிடங்கள் மற்றும் அமைப்புக்கள் | 626,519 | 488,605 |
| ஏனையவை | 383,379 | 67,444 |
| | **2,505,036** | **1,287,088** |

| **குறிப்பு - 20** | 2023 | 2022 |
|---|---|---|
| **ஒப்பந்த சேவைகள்** | ரூ. | |
| போக்குவரத்து | 1,377,591 | 2,020,546 |
| தபால் மற்றும் தொலைத் தொடர்பு | 5,184,954 | 4,481,232 |
| மின்சாரம் | 13,021,523 | 4,732,227 |
| நீர் | 2,273,772 | 1,612,229 |
| பாதுகாப்பு சேவை | 5,524,743 | 4,863,594 |
| சுத்திகரிப்பு சேவை | 7,764,555 | 6,411,016 |
| ஏனைய சேவைகள் | 1,400,283 | 1,135,230 |
| அச்சிடல் மற்றும் பிரச்சாரம் | 1,265,119 | 1,407,567 |
| | **37,812,539** | **26,663,640** |

| குறிப்பு - 21 | 2023 | 2022 |
|---|---|---|
| **ஏனைய மீண்டெழும் செலவுகள்** | **ரூ.** | |
| வருகை தரு விரிவுரையாளர் கட்டணம் | 308,250 | 284,700 |
| விசேட சேவைகள் - பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மற்றும் குழுக் கூட்டங்கள் | 1,045,095 | 803,482 |
| செயலமர்வுகள், கருத்தரங்குகள் | 5,000 | 67,660 |
| வங்கிக் கட்டணம் | 3,000 | 267,609 |
| சான்றிதழ் பாடநெறி செலவுகள் UCIARS | 1,048,230 | 568,518 |
| பொழுதுபோக்குச் செலவுகள் | 71,564 | 80,568 |
| ஆளணி அபிவிருத்தி | 9,740 | 203,625 |
| பண்ணை மற்றும் நீர் முகாமைத்துவ செலவுகள் | 4,680,997 | 8,516,659 |
| பரீட்சை செலவுகள் | 2,088,618 | 2,461,877 |
| மிருக வளர்ப்பு | 8,627,477 | 7,179,571 |
| அனுமதிப் பத்திரம் மற்றும் காப்புறுதிக் கட்டணம் | 312,381 | 342,667 |
| புறத்தொதுக்கல் நட்டம் | 451,714 | 107,571 |
| மஞ்சள் ஆராய்ச்சி செலவுகள் | - | - |
| ஆராய்ச்சிக் கருத்தரங்கு (Sympossium) செலவுகள் | 276,603 | 109,950 |
| பயிற்சிக் கட்டணம் | 1,016,050 | 1,044,150 |
| கணக்காய்வுக் கட்டணம் | 413,472 | 336,000 |
| ஆலோசனைக் கட்டணம் | 115,582 | 861,373 |
| அன்பளிப்புக்கள் | - | 55,800 |
| ஏனையவை | 1,013,730 | 586,804 |
| அறவிட முடியாத கடன்கள் | 68,636 | - |
| கள்ள நோட்டு | 1,000 | - |
| ஏனைய கருத்திட்டங்களுக்கான செலவுகள் | 210,000 | - |
| யோகட் உற்பத்திச் செலவுகள் | | 149,848 |
| ஒத்திவைக்கப்பட்ட வரிச் செலவுகள் | 87,517 | - |
| | **21,854,655** | **24,028,431** |

**குறிப்பு - 22 - கிரயத்தை (செலவை) கணக்கிடுவதற்கான குறிப்புக்கள் - ஆரம்பக் கிரயம் -**

**மூலப் பொருட்களுக்கான கிரயம் 3,292,501 1,758,014**

| விபரம் | 2023 | | 2022 | |
|---|---|---|---|---|
| | **இரசாயனப் பொருட்கள்** | **தென்னை நார் உருண்டை** | **இரசாயனப் பொருட்கள்** | **தென்னை நார் உருண்டை** |
| ஆரம்ப இருப்பு | 165,470.36 | 112,712.00 | 125,836.82 | 3282.50 |
| ஆய்வுகூடம் மற்றும் நாற்று மேடைக்கான விநியோகம் | 1,141,109.77 | 2,096,950.00 | 669,577.26 | 1,237,500.00 |
| இறுதி இருப்பு | (185,847.49) | (37,893.75) | (165,470.36) | (112,712.00) |
| உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்களுக்கான செலவு | 1,120,732.64 | 2,171,768.25 | 629,943.72 | 1,128,070.50 |

**உற்பத்தி தொடர்பான தனிப்பட்ட விபரங்கள்**

| விபரம் | 2023 | 2022 |
|---|---|---|
| ஆளுக்கான வேதனங்கள் மற்றும் சம்பளம் - உற்பத்திப் பிரிவு | 14,590,826 | 15,294,841 |
| பல்கலைக்கழக சேமலாப நிதியம் (UPF) - உற்பத்திப் பிரிவு | 869,093 | 922,553 |
| ஓய்வூதியம் - உற்பத்திப் பிரிவு | 867,720 | 951,484 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) - உற்பத்திப் பிரிவு | 347,363 | 374,808 |
| | 16,675,001 | 17,543,686 |

**மறைமுக செலவுகள் / நானாவித அலுவல்கள்**

| விபரம் | 2023 | 2022 |
|---|---|---|
| தொலைபேசி 5% | 19,796 | 15,734 |
| நீர் - 20% | 568,443 | 403,057 |
| மின்சாரம் - 20% | 1,074,309 | 1,184,538 |
| பராமரிப்புச் செலவுகள் | 180,700 | 90,570 |
| வன்பொருட்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள் | 1,548,613 | 1,070,676 |
| ஆய்வுகூட உபகரணங்களின் தேய்மானம் | 408,855 | 408,722 |
| ஏனைய மறைமுக செலவுகள் | 42,056 | 27,075 |
| | **3,842,772** | **3,200,371** |

# தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இலக்கம்: SPCG/HM/C/FA/IARS/2023/02 திகதி : 2024 மே 15 ஆம் திகதி

**பணிப்பாளர்,**

விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகம்.

**<u>கொழும்புப் பலக்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகத்தின் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்புந்தமாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை</u>**

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பளியுள்ள கருத்துரை**

கொழும்புப் பலக்கலைக்கழகத்துடன் இணைந்த விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகத்தின் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று, அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றல் கூற்று மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்புக்கள், பொழிப்புச் செய்யப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) உறுப்புரையுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது ஆணைப் பிரகாரம் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) உறுப்புரைப் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பளியுள்ள கருத்துரைக்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் ஊடாக ஏற்படும் அழுத்தங்கள் தவிர நிறுவனத்தின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை மற்றும் அன்றைய தினத்துடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதித் தொழிற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மை மற்றும் நியாயமான நிலைமையை எடுத்தியம்பவில்லையென்பது எனது கருத்தாகும்.

**1.2 முனைப்பளியுள்ள கருத்துரைக்கான அடிப்படை**

(அ) மீளாய்வாண்டில் ஏனைய வருமானங்களை ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூ. 1,102,672 செலவை வாழைக் கன்றுகள் விற்பனை வருமானத்தைக் கணக்கிடும்போது குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தமையின் காரணமாக வாழைக் கன்றுகள் விற்பனையின் மொத்த இலாபம் மற்றும் ஏனைய ஈட்டிய வருமானம் அந்த அளவினால் முறையே குறைவாகவும் அதிகமாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) மஞ்சள் கன்றுகள் உற்பத்தி நடவடிக்கை தோல்வியடைந்தமையின் காரணமாக அதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூ. 324,030 செலவை நிதிச் செயலாற்றுகை கூற்றில்

நட்டமொன்றாக குறிப்பிட்டு பதிவழிப்புச் செய்வதற்குப் பதிலாக வாழைக் கன்றுகள் உற்பத்திச் செலவின் கீழ் கணக்கில் பதியப்பட்டிருந்தது.

(இ) காசுப் பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும்போது தொழிற்பாட்டு மூலதன மாற்றத்தின் கீழ் பெறப்பட வேண்டிய வட்டி மாற்றங்களாக ரூ.1,206,307 காண்பிக்கப்பட வேண்டியிருப்பினும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அந்த மாற்றம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மேலும், மீளாய்வாண்டில் உயிர் இருப்புக்கள் விற்பனை மற்றும் கொள்வனவு முறையே ரூ. 2,569,375 மற்றும் ரூ. 755,580 ஆக இருப்பினும் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் முறையே காசுப் பாய்ச்சலின் கீழ் ரூ. 738,683 மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது.

(உ) நிதிச் செயலாற்றுகைக் கூற்றுக்கமைய வருடாந்த தேய்மானம் ரூ. 38,355,138 ஆக இருந்தாலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதியல்லாத கொடுக்கல் வாங்கலின் கீழ் ரூ. 38,903,339 எனக் குறிப்பிடப்பட்டிருந்தமையினால் காசுப் பாய்ச்சல் கூற்றில் அந்தப் பெறுமதி ரூ. 548,201 அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஊ) நிதிச் செயலாற்றுகைக் கூற்றுக்கமைய பெறுமதி தேய்மானம் ரூ. 139,346 ஆயினும் காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதியல்லாத கொடுக்கல் வாங்கல் சீர்படுத்தலின் கீழ் அந்தப் பெறுமதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய என்னால் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துரைக்கான அடிப்படையை வழங்குவதன் நிமித்தம் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுக்கான சாட்சியங்கள் போதுமானவை மற்றும் பொருத்தமானவைகள் என நான் நம்புகின்றேன்.

### 1.3 நிறுவகத்தின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்.

இந்தக் கணக்காய்வறிக்கைத் திகதிக்கு முன்னர் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட நிறுவகத்தின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆனாலும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் எனக் கருதப்படுகின்றது. இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக் கூற வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான எனது கருத்துரையில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படாதிருப்பதுடன் நான் அது சம்பந்தமாக எந்த விதமான சான்றுப்படுத்தலையோ கருத்தையோ வெளியிடவில்லை.

மேலே இனங்கண்டுகொள்ளப்பட்ட ஏனைய தகவல்களை வாசித்தல் மற்றும் அவ்வாறு மேற்கொள்ளும்போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின்போது வேறு விதத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட எனது அறிவுக்கமைய போதுமானளவில் பொருந்தவில்லையா என்பதனைக் கவனத்திற்கொள்ளல் நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான எனது கணக்காய்வுடன் தொடர்பான எனது பொறுப்பாகும்.

இந்தக் கணக்காய்வறிக்கைத் திகதிக்கு முன்னர் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய தகவல்களின் அடிப்படையில் மற்றும் என்னால் மேற்கொள்ளப்பட்ட அலுவல்களின் அடிப்படையில் இந்த ஏனைய தகவல்கள் பிழையாகக் குறிப்பிடப்பட்டிருப்பதாக நான் தீர்மானித்தால் அந்த விடயங்களை நான்

அறிக்கைப்படுத்தல் அவசியமாகும். இது தொடர்பில் என்னால் அறிக்கைப்படுத்துவதற்கு எதுவுமில்லை.

### 1.4 நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் மற்றும் நிர்வகிக்கும் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரித்தல் மற்றும் நியாயமான வகையில் சமர்ப்பித்தல் மற்றும் ஊழல் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின்றி நிதிக் கூற்றுக்களை தயாரிக்க முடியுமாக இருப்பதற்குத் தேவையான உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது நிறுவகத்தை தொடர்ந்தும் நடாத்துவதற்கான ஆற்றலைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருப்பதுடன் முகாமைத்துவம், நிறுவகத்தை கலைத்துவிடுவதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாதவிடத்து செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டாலே தவிர தொடர்ச்சியான இருப்பின் அடிப்படையில் கணக்குப் பதிதல் மற்றும் நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்புடன் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்திக்கொள்வதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கைப்படுத்தல் செயற்பாடுகள் தொடர்பாக சோதனையிடும் பொறுப்பு நிர்வகிக்கும் தரப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலப்பகுதிக்கான நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் ஆணைக்குழுவின் வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக உரிய பிரகாரம் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிவரல் வேண்டும்.

### 1.5 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மொத்தமாக, நிதிக் கூற்று ஊழல் மற்றும் தவறுகளால் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை கொண்டிராதவை என நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வு அறிக்கையை வெளியிடுதல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்பாடாக இருந்தாலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்வதற்கான உறுதிப்பாடாக இல்லாதிருக்கும். ஊழல் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்பட முடியுமாக இருப்பதுடன், அதன் அளவானது இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு பயனர்களால் எடுக்கப்படும் பொருளாதாரம் சார்ந்த தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில் நியாயம் மற்றும் தொழில் ஐயப்பாட்டுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வுக் கருத்துரைக்கான அடிப்படையை வழங்கும்போது ஊழல் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக்கூடிய ஆபத்தை இனங்கண்டுகொள்ளல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. பிழையாகக் குறிப்பிடப்பட்டதன் காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினைப் பார்க்கிலும் ஊழல் காரணமாக ஏற்படும் தாக்கம்

பலமானதாக இருப்பதுடன் கெட்ட கூட்டணி, பொய் ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்த்தல் ஊழல் இடம்பெறுவதற்கான காரணங்களாகும்.

- உள்ளக நிர்வாகத்தின் பயன்தருதன்மை சம்பந்தமாக கருத்தை தெரிவிக்கும் நோக்கில் இல்லாவிட்டாலும், சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக நிர்வாகம் சம்பந்தமான தெளிவு பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்பு சம்பந்தமாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சாட்சியங்களின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக விஞ்ஞான நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்பு சம்பந்தமான அடிப்படையை பயன்படுத்திக்கொள்ளும் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதுமான நிச்சயமற்ற தன்மை நிலவுவதாக நான் தீர்மானித்தால் நிதிக் கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது கருத்தை திருத்தியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்பு முடிவுறுத்தப்படலாம்.

- நிதிக் கூற்றுக்களில் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான விதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் மொத்த முன்னிலைப்படுத்தல்கள் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டது.

  எனது கணக்காய்வின்போது இனங்கண்டுகொள்ளப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டறிதல்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு வினைத்திறனின்மை மற்றும் ஏனைய பொதுவான விடயங்கள் சம்பந்தமாக ஆளும் தரப்புக்களுக்கு அறிவுறுத்துகின்றேன்.

## 2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழ் குறிப்பிடப்படும் தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 எனது அறிக்கையில் முனைப்பளியுள்ள கருத்துரைக்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்கள் தவிர, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், எனது ஆய்வின்போது நிறுவகம் உரிய நிதி அறிக்கைகளை பேணி வந்திருப்பதனைக் காண முடியுமாக இருக்கின்றது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இயைந்துள்ளது.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் மற்றும் அளவு சார்ந்த விடயங்களுக்குள் வரையறுக்கப்பட்ட வகையில் கீழ் குறிப்பிடப்படும் கூற்றுக்களை வெளியிடுமளவிற்கான எதுவும் எனது கவனத்திற்குட்படவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய நிறுவகத்தினது நிர்வாக சபையின் எவரேனுமொரு அங்கத்தவருக்கு ஆணைக்குழுவுடன் தொடர்புடைய ஏதேனுமொரு உடன்படிக்கை தொடர்பில் நேரடியாக அல்லது வேறு விதத்தில் பொதுவான வர்த்தக நிலைமைக்குப் புறம்பான வகையில் தொடர்பு இல்லாதிருத்தல்.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைய கீழ் குறிப்பிடப்படும் அவதானிப்புக்கள் தவிர ஏதேனுமொரு ஏற்புடைத்தாகும் எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இயைந்துசெல்லாத வகையில் செயற்பட்டிருத்தல்.

| | **சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் அல்லது நிர்வாக சபையினால் வெளியிடப்பட்ட ஏற்பாடுகள்** | **விபரம்** |
|---|---|---|
| (அ) | 1995 யூலை 14 ஆம் திகதிய 636 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட 35 பரீட்சைகள் தொடர்பான பெறுபேறுகளை வெளியிடுவதில் 36 நாட்கள் முதல் 424 நாட்கள் கால தாமதம் ஏற்பட்டிருந்தது. |
| (ஆ) | 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சட்டத்தின் 11 ஆம் பிரிவு | தொடர்புடைய அமைச்சரின் மற்றும் நிதி அமைச்சரின் அங்கீகாரமின்றி மேலதிக ரூ. 12,199,800 தொகை 11 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவகங்களுக்கான தாபன விதிக் கோவையின் XX ஆவது அத்தியாயத்தின் இலக்கம் 3.1 | இந்த நிறுவகத்தில் பணயாற்றும் அனைவரும் வருகை தருகின்ற நேரம் மற்றும் வெளியேறிச் செல்லும் நேரத்தைக் குறிப்பிட வேண்டியிருந்தாலும் நிறுவகத்தின் கல்விசார் ஆளணி அங்கத்தவர்களுக்காக வருகைப் பதிவேடொன்று அல்லது விரிவுரை குறிப்பேடுகள் பராமரித்துப் பேணி வரப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | நிறுவகத்திற்கான வழிகாட்டல் கோவையின் 4 (ஒ) பிரிவு | நிறுவகத்தின் அலுவல்களுக்குத் தேவையான நூலக வசதிகளைப் பேணி வர வேண்டியிருந்த போதிலும் அன்பளிப்பாக கிடைக்கப் பெற்றிருந்த 1150 நூல்கள் மற்றும் நிறுவகத்தினால் கொள்வனவு |

| | | |
|---|---|---|
| | | செய்யப்பட்டிருந்த ரூ. 643,498 பெறுமதிமிக்க 162 நூல்களை 05 வருட காலமாக மாணவர்களுக்கு பயன்படுத்துவதற்குப் போதுமானளவு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைய நிறுவகத்தின் அதிகாரங்கள், அலுவல்கள் மற்றும் கடமைகளுடன் இயைந்து செல்லாத வகையில் அலுவல் மேற்கொள்ளப்படவில்லையென்ற விடயம்.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைய நிறுவகத்தின் வளங்களை சிக்கனமாக, வினைத்திறனுடன் மற்றும் பயன்மிக்க வகையில் உரிய காலப் பகுதிக்குள் குறிப்பிட்ட ஏற்புடைத்தாகும் சட்ட ஒழுங்குவிதிகளுக்கிணங்க பெற்றுக்கொள்ளப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதென்ற விடயம்.

**2.3 ஏனைய விடயங்கள்**

(அ) பாடநெறிக் கட்டணப் பதிவேட்டிற்கமைய 2023 திசெம்பர் 31 ஆம் திகதியன்று கல்வி பயிலுகின்ற 1048 மாணவர்களில் 115 மாணவர்கள் பதிவு செய்துகொள்வதற்கான விண்ணப்பங்களை நிருவாகப் பிரிவுக்கு அனுப்பியிருக்கவில்லை.

(ஆ) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் விவசாயிகளின் நம்பிக்கை நிதியத்தினூடாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடன் தொகைகளில் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூ. 559,690 கடன் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2019 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை விவசாய தொழில்நுட்ப பட்டப் பாடநெறிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட 268 மாணவர்களில் 100 மாணவர்கள் அதாவது, 37% ஆனோர் பட்டப் பாடநெறியைப் பூர்த்தி செய்யாதிருப்பதோடு மாணவர்களுக்கு பொருளாதார ரீதியிலான சிரமங்கள் காணப்படுதல் பிரதான காரணியாக இருப்பதாக முகாமைத்துவத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) கல்வி நடவடிக்கைகளுடன் தொடர்பாக 2022 ஆம் ஆண்டு மற்றும் மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டிருந்த 25 பரீட்சைகளில் 2600 மாணவர்கள் தோற்றியிருந்ததுடன், அதிவ் 1141 மாணவர்கள் சித்தியடைந்திருக்கவில்லை. அதற்கிணங்க, பரீட்சையில் சித்தியடையாதிருந்த சதவீதம் 12% முதல் 97% வரையான வீச்சில் காணப்பட்டது.

(உ) 2020 ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதிய UGC/IDD/GEN/10 (07) ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கடிதத்திற்கமைய நிறுவகத்தினால் பயன்படுத்திக்கொள்ளப்படும் காணிகளின் சட்ட ரீதியான உரிமையை மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் 50 ஏக்கர் காணியின் உரிமையை மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், நிறுவகத்திற்கு சட்ட ரீதியான உரிமை இல்லாத காணிகளில் நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டில் ரூ. 6,404,534 செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) பண்ணையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக முறையான மதிப்பீடொன்றை தயாரித்து தேவையான இயந்திர மணித்தியாலங்களின் அளவை இனங்கண்டுகொள்ளாமல் மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய ஆண்டில் 02

சந்தர்ப்பங்களில் வாடகை அடிப்படையில் பெக்கோ இயந்திரங்களைப் பெற்று 152 இயந்திர மணித்தியாலங்களுக்கு, மணித்தியாலத்திற்கு ரூ. 6,500 வீதம் ரூ. 988,000 வெளித் தரப்பொன்றுக்குச் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய 2022 மற்றும் 2023 மாவட்ட விலைக் குழுவுக்கமைய இயந்திர மணித்தியாலங்களுக்காக செலுத்துவதற்கு முடியுமான உச்சளவு கட்டணத்தை விஞ்சி ரூ. 198,700 அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(எ) நிறுவகத்திற்குச் சொந்தமான உணவகத்தை வாடகைக்கு வழங்குவதனூடாக கிடைக்கவிருந்த ரூ. 50,700 மற்றும் பணியிலிருந்து நீங்கிய 07 ஊழியர்களுக்கு பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்காக மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த ரூ. 91,352 தொகை கணக்காய்வுத் திகதியான 2023 மார்ச் 13 ஆம் திகதியாகும்போது அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) இழைய வளர்ப்பு நிலையத்தை பகுதிகளாக பிரிக்கின்ற விடயத்திற்கான கொடுப்பனவு விலைப்பட்டியலில் இரண்டு விடயங்களுக்காக ரூ. 944,623 அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும், மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்த அங்கீகரிக்கப்பட்ட கட்டிட விலை அளவுகளுக்கிணங்க காலம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஐ) தன்னியக்க நிரந்தர வீடமைப்புத் திட்டத்துடன் தொடர்புடைய மதிப்பீடு செய்யப்பட்ட சிவில் பணிகளின் பெறுமதியைத் தாண்டி ரூ. 1,107,415 அதிகமாக செலவிடப்பட்டிருந்தது.

**டப்ளியூ.பீ.சீ.விக்கிரமரத்ன**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

## நிதிக் கணக்காய்வு - 2023
## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

**உமது இலக்கம்: SPCG/HM/C/FA/IARS/2023/02**

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகம்

| கணக்காய்வறிக்கையின் பந்தி இல. | கணக்காய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் | கணக்காய்வறிக்கையின் அவதானிப்புக்களுக்கான பதில்கள் |
|---|---|---|
| **1.** | **நிதிக் கூற்றுக்கள்** | |
| **1.** | **முனைப்பளியுள்ள கருத்துரைக்கான அடிப்படை** | |
| **(அ)** | மீளாய்வாண்டில் ஏனைய வருமானங்களை ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூ. 1,102,672 செலவை வாழைக் கன்றுகள் விற்பனை வருமானத்தைக் கணக்கிடும்போது குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தமையின் காரணமாக வாழைக் கன்றுகள் விற்பனையின் மொத்த இலாபம் மற்றும் ஏனைய ஈட்டிய வருமானம் அந்த அளவினால் முறையே குறைவாகவும் அதிகமாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டுடன் தொடர்பாக சோயா போஞ்சி மற்றும் மஞ்சள் உற்பத்தி மூலமான வருமானம் இல்லையென்பதோடு அந்த செயற்பாடுகள் ஊடாக பிறப்பிக்கப்பட்ட செயற்பாட்டு நட்டத்தை சரியாகக் காண்பிப்பதற்காக அந்த உற்பத்திச் செலவுகளை மொத்த இலாபத்திலிருந்து குறைத்துக் காண்பிக்கப்பட்டுள்ளது. |
| **(ஆ)** | மஞ்சள் கன்றுகள் உற்பத்தி நடவடிக்கை தோல்வியடைந்தமையின் காரணமாக அதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூ. 324,030 செலவை நிதிச் செயலாற்றுகை கூற்றில் நட்டமொன்றாக குறிப்பிட்டு பதிவழிப்புச் செய்வதற்குப் பதிலாக வாழைக் கன்றுகள் உற்பத்திச் செலவின் கீழ் கணக்கில் பதியப்பட்டிருந்தது. | 2024 நிதியாண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

| | | |
|---|---|---|
| (இ) | காசுப் பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும்போது தொழிற்பாட்டு மூலதன மாற்றத்தின் கீழ் பெறப்பட வேண்டிய வட்டி மாற்றங்களாக ரூ.1,206,307 காண்பிக்கப்பட வேண்டியிருப்பினும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அந்த மாற்றம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் பெறப்பட வேண்டியவ வட்டி வீத மாற்றம் ரூ. 1,411,433 முதலீட்டுச் செயற்பாடுகள் மூலமான நிதிப் பெறுகைகளில் சீர்படுத்தப்பட்டுள்ளது. |
| (ஈ) | மீளாய்வாண்டில் உயிர் இருப்புக்கள் விற்பனை மற்றும் கொள்வனவு முறையே ரூ. 2,569,375 மற்றும் ரூ. 755,580 ஆக இருப்பினும் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் முறையே காசுப் பாய்ச்சலின் கீழ் ரூ. 738,683 மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் உயிர் இருப்புக்கள் விற்பனை ரூ. 1,388,880 ஆகுமென்பதோடு கொள்வனவு ரூ.755,580 ஆகும். எனவே அதன் தேறிய பெறுமதி ரூ. 633,300 ஆகுமென்பதோடு, ரூ. 105,383 மாற்றத்தை மாத்திரம் காண்பிக்கின்றது. |
| (உ) | நிதிச் செயலாற்றுகைக் கூற்றுக்கமைய வருடாந்த தேய்மானம் ரூ. 38,355,138 ஆக இருந்தாலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதியல்லாத கொடுக்கல் வாங்கலின் கீழ் ரூ. 38,903,339 எனக் குறிப்பிடப்பட்டிருந்தமையினால் காசுப் பாய்ச்சல் கூற்றில் அந்தப் பெறுமதி ரூ. 548,201 அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தது. | 2024 நிதியாண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஊ) | நிதிச் செயலாற்றுகைக் கூற்றுக்கமைய பெறுமதி தேய்மானம் ரூ. 139,346 ஆயினும் காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதியல்லாத கொடுக்கல் வாங்கல் சீர்படுத்தலின் கீழ் அந்தப் பெறுமதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | 2024 நிதியாண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| **2.** | **ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை** | |
| **2.2.2** | **சட்டங்கள் விதிகள் / பிரமாணங்கள்** | |
| (அ) | **1995 யூலை 14 ஆம் திகதிய 636 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை**<br><br>2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட 35 பரீட்சைகள் தொடர்பான பெறுபேறுகளை வெளியிடுவதில் 36 நாட்கள் முதல் 424 நாட்கள் கால தாமதம் ஏற்பட்டிருந்தது. | தற்போது உரிய காலப் பகுதியினுள் பெறுபேறுகள் வெளியிடப்படுகின்றது. |
| (ஆ) | **1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சட்டத்தின் 11 ஆம் பிரிவு**<br><br>தொடர்புடைய அமைச்சரின் மற்றும் நிதி அமைச்சரின் அங்கீகாரமின்றி மேலதிக ரூ. 12,199,800 தொகை 11 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்வதுடன் நிதிக் குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் முதலீட்டுக் கொள்கையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (இ) | **பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவகங்களுக்கான தாபன விதிக் கோவையின் XX ஆவது அத்தியாயத்தின் இலக்கம் 3.1**<br><br>குறித்த நிறுவகத்தில் பணியாற்றும் அனைவரும் வருகை தருகின்ற நேரம் மற்றும் வெளியேறிச் செல்லும் நேரத்தைக் குறிப்பிட வேண்டியிருந்தாலும் நிறுவகத்தின் கல்விசார் ஆளணி அங்கத்தவர்களுக்காக வருகைப் பதிவேடொன்று அல்லது விரிவுரை குறிப்பேடுகள் பராமரித்துப் பேணி வரப்பட்டிருக்கவில்லை. | தற்போது குறித்த பதிவேடுகள் பேணி வரப்படுகின்றது. |
| (ஈ) | **நிறுவகத்திற்கான வழிகாட்டல் கோவையின் 4 (ஒ) பிரிவு**<br><br>நிறுவகத்தின் அலுவல்களுக்குத் தேவையான நூலக வசதிகளைப் பேணி வர வேண்டியிருந்த போதிலும் அன்பளிப்பாக கிடைக்கப் பெற்றிருந்த 1150 நூல்கள் மற்றும் நிறுவகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூ. 643,498 பெறுமதிமிக்க 162 நூல்களை 05 வருட காலமாக மாணவர்களுக்கு பயன்படுத்துவதற்குப் போதுமானளவு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தற்காலிக அடிப்படையில் ஆண் நூலக உதவியாளர் ஒருவரை / பெண் நூலக உதவியாளர் ஒருவரை ஆட்சேர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| 2.<br>3 | **ஏனைய விடயங்கள்** | |
| (அ) | பாடநெறிக் கட்டணப் பதிவேட்டிற்கமைய 2023 திசெம்பர் 31 ஆம் திகதியன்று கல்வி பயிலுகின்ற 1048 மாணவர்களில் 115 மாணவர்கள் பதிவு செய்துகொள்வதற்கான விண்ணப்பங்களை நிருவாகப் பிரிவுக்கு அனுப்பியிருக்கவில்லை. | தற்போது நிறுவனத்திற்கு student information system (SIS) ஒன்றை அறிமுகஞ் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருவதுடன் அதனை தாபித்ததன் பின்னர் தாமதமின்றி தவணைத் தொகையைச் செலுத்தல் மற்றும் பதிவை ஒரே தடவையில் மேற்கொள்வதற்கு முடியும். |
| (ஆ) | 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் விவசாயிகளின் நம்பிக்கை நிதியத்தினூடாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடன் தொகைகளில் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூ. 559,690 கடன் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்தக் கடன் தொகை தொடர்பான இறுதி அறிவித்தல் விடுக்கப்பட்டு 2023.11.15 ஆம் திகதி கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், கணக்காய்வுக் குழுவின் பிரகாரம் இந்தத் தொகையை ஏடுகளிலிருந்து பதிவழிப்புச் செய்தல் தொடர்பான அவதானிப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்காக அரசாங்க கணக்காய்வாளருக்கு தேவையான எழுத்தாவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |

| | | |
|---|---|---|
| (இ) | 2019 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை விவசாய தொழில்நுட்ப பட்டப் பாடநெறிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட 268 மாணவர்களில் 100 மாணவர்கள் அதாவது, 37% ஆனோர் பட்டப் பாடநெறியைப் பூர்த்தி செய்யாதிருந்தனர். | இந்தப் பாடநெறி பணம் அறவிடப்பட்டு மேற்கொள்ளப்படுகின்ற பட்டப் பாடநெறியாக இருப்பதுடன், இடைநடுவில் பாடநெறியை விட்டுச் செல்வதற்கான பிரதான காரணம் பணம் செலுத்துவதற்கான சிரமம் என்ற விடயம் கண்டறியப்பட்டுள்ளது.<br><br>இது தவிர, பட்டப் பாடநெறியின் பல்வேறு மட்டங்களில் விலகிச் செல்வதற்கான வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | கல்வி நடவடிக்கைகளுடன் தொடர்பாக 2022 ஆம் ஆண்டு மற்றும் மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டிருந்த 25 பரீட்சைகளில் 2600 மாணவர்கள் தோற்றியிருந்ததுடன், அதில் 1141 மாணவர்கள் சித்தியடைந்திருக்கவில்லை. அதற்கிணங்க, பரீட்சையில் சித்தியடையாதிருந்த சதவீதம் 12% முதல் 97% வரையான வீச்சில் காணப்பட்டது. | இந்தப் பாடநெறிக்காக அனுமதித்துக்கொள்ளப்படும் மாணவர்கள் விவசாயத் துறையுடன் சம்பந்தப்பட்ட ஆனாலும் உயர் தரம் சித்தியடைந்துள்ள, ஆனாலும் போதுமானளவு Z புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளாமையின் காரணமாக பல்கலைக்கழக அனுமதியை இழந்துள்ள மாணவர்களாகும். இதன் காரணமாக சித்தியடையாத சதவீதமானது ஆரம்பக் கல்வியாண்டுகளில் அதிகமாக இருக்கலாம். பின்னர் இது குறைவடையும். |
| (உ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2020 ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதிய UGC/IDD/GEN/10 (07) ஆம் இலக்க கடிதத்திற்கமைய நிறுவகத்தினால் பயன்படுத்திக்கொள்ளப்படும் காணிகளின் சட்ட ரீதியான உரிமையை மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் 50 ஏக்கர் காணியின் உரிமையை மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், நிறுவகத்திற்கு சட்ட ரீதியான உரிமை இல்லாத காணிகளில் நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டில் ரூ. 6,404,534 செலவிடப்பட்டிருந்தது. | நிறுவகத்தினால் தற்போது அனுபவிக்கப்படுகின்ற சுமார் 50 ஏக்கர் காணியின் சட்ட ரீதியான உரிமையை மாற்றிக்கொள்வதுடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு குத்தகை ஒப்பந்தமும் 2017 ஆம் ஆண்டில் காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தில் நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் ஒப்பமிடப்பட்டது. ஆயினும் இதுவரை காணியின் சட்ட ரீதியான உரிமையை மாற்றிக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, அது நிறுவகத்தின் கட்டுப்பாட்டை மீறிய விடயமொன்றாகும். எவ்வாறாயினும் இது தொடர்பாக நிறுவகம் காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்திற்கு நினைவூட்டல் கடிதங்களை அனுப்பியுள்ளதுடன் ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலாளர் மற்றும் லுணுகம்வெஹெர பிரதேச செயலாளர் ஆகியோருக்கு இது தொடர்பாக அறிவுறுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.<br><br>எனவே காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தினால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் மீண்டும் அதாவது 2024.03.07 ஆம் திகதி 50 ஏக்கர் காணிக்கான குத்தகை ஒப்பந்தத்தில் நிறுவகம் கைச்சாத்திட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஊ) | பண்ணையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக முறையான மதிப்பீடொன்றை தயாரித்து தேவையான இயந்திர மணித்தியாலங்களின் அளவை இனங்கண்டுகொள்ளாமல் மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய ஆண்டில் 02 சந்தர்ப்பங்களில் வாடகை அடிப்படையில் பெக்கோ இயந்திரங்களைப் பெற்று 152 இயந்திர மணித்தியாலங்களுக்கு, மணித்தியாலத்திற்கு ரூ. 6,500 வீதம் ரூ. 988,000 வெளித் தரப்பொன்றுக்குச் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய 2022 மற்றும் 2023 மாவட்ட விலைக் குழுவுக்கமைய இயந்திர மணித்தியாலங்களுக்காக செலுத்துவதற்கு முடியுமான உச்சளவு கட்டணத்தை விஞ்சி ரூ. 198,700 அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | 140 இயந்திர மணித்தியாலங்களுக்கு முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், களத்தில் பணியாற்றும்போது நடைமுறையில் அது கூடிக் குறைவதன் காரணத்தினால் 12 மணித்தியால மாற்றம் ஏற்பட்டாலும் அதற்கான உரிய அங்கீகாரம் பெறப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>நிறுவகத்தினால் உரிய பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய விலை மனுக்கள் கோரப்பட்டு குறைந்த விலை அளவுகளை சமர்ப்பித்திருந்த வழங்குனர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட ஆகக் குறைந்த விலை அளவான ஒரு இயந்திர மணித்தியாலத்திற்கு ரூ. 6,500 வீதம் பெக்கோ இயந்திரம் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டது. |
| (எ) | நிறுவகத்திற்குச் சொந்தமான உணவகத்தை வாடகைக்கு வழங்குவதனூடாக கிடைக்கவிருந்த ரூ. 50,700 மற்றும் பணியிலிருந்து நீங்கிய 07 ஊழியர்களுக்கு பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்காக மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த ரூ. 91,352 தொகை கணக்காய்வுத் திகதியான 2023 மார்ச் 13 ஆம் திகதியாகும்போது அறவிடப்பட்டிருக்கவில்லை. | உணவகம் தொடர்பில் ஹம்பாந்தோட்டை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டதுடன் (06.06.2023) உணவக உரிமையாளருக்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது (2022.12.21 / 2023.04.03). ஹம்பாந்தோட்டை பொலீஸ் நிலையத்தினால் இது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.<br><br>பணியிலிருந்து நீங்கிய 07 ஊழியர்களுக்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த தொகையை அறவிட்டுக்கொள்ளல் தொடர்பாக நிறுவகத்தின் நிதிக் குழு / முகாமைத்துவக் குழுவின் பரிந்துரைகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் (03.11.2022 / 09.11.2023) குறித்த முன்னாள் ஊழியர்களுக்கு நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. (01.01.2023 / 25.09.2023). அத்தோடு தொலைபேசி அழைப்புக்கள் ஊடாகவும் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், மீண்டும் நினைவூட்டல் கடிதங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு கொடுப்பனவு தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை கணக்காய்வுக் குழுவுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஏ) | இழைய வளர்ப்பு நிலையத்தை பகுதிகளாக பிரிக்கின்ற விடயத்திற்கான கொடுப்பனவு விலைப்பட்டியலில் இரண்டு விடயங்களுக்காக ரூ. 944,623 அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும், மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு | இழைய வளர்ப்பு நிலையத்தை பகுதிகளாக பிரிக்கின்ற திட்டத்திற்காக தேசிய போட்டி அடிப்படையிலான விலை மனுக் கோரலின் கீழ் சிறப்பான வகையில் விலை மனுக்களை முன்வைத்த |

| | | |
|---|---|---|
| | அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்த அங்கீகரிக்கப்பட்ட கட்டிட விலை அளவுகளுக்கிணங்க காலம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்ததாரர் ஒருவரே தெரிவு செய்யப்பட்டார். குறித்த பணி ஒப்பந்த உடன்படிக்கையின் BOQ இல் குறிப்பிடப்பட்டுள்ள விலை அளவுகளின் பிரகாரம் மாத்திரமே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.<br><br>மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு 2022 ஆம் ஆண்டிற்கான விலை அளவுகள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளன. |
| **(ஐ)** | தன்னியக்க நிரந்தர வீடமைப்புத் திட்டத்துடன் தொடர்புடைய மதிப்பீடு செய்யப்பட்ட சிவில் பணிகளின் பெறுமதியைத் தாண்டி ரூ. 1,107,415 அதிகமாக செலவிடப்பட்டிருந்தது. | இந்த நிர்மாணிப்புக்கான உண்மையான செலவு ரூ. 6,120,217 ஆகும். நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும்போது ஏற்பட முடியுமான விலைத் தளம்பல்களையும் கவனத்திற் கொண்டே பொறியில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய மதிப்பீட்டினுள் விலைத் தளம்பல்களுக்காக 15% உம் பௌதிக ரீதியிலான தளம்பல்களுக்காக 10% உம் என 25% சதவீதம் தளம்பல்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும்போது தளம்பல்கள் ஏற்படல் பொதுவாக ஏற்படுவதுடன் அந்தக் காலப் பகுதியினுள் சந்தையில் மூலப் பொருட்களுக்காக கடும் விலைத் தளம்பல்கள் ஏற்பட்டுள்ளதுடன் அவ்வாறு விலைத்தளம்பலுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 15% ஊ சதவீதம் போதுமானதாக இல்லை. எவ்வாறாயினும் அதிகமாக மேற்கொள்ளப்பட்ட ரூ. 1,107,415.00 செலவானது விலைத்தளம்பலுக்கான ஒதுக்கீட்டினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.<br><br>நிர்மாணச் செலவுகள் அதிகரித்தமைக்கான காரணங்கள் பொழிப்புச் செய்யப்பட்டு பொறியியல் அலுவல்களுக்கான மத்திய மதியுரைப் பணியகத்தினால் கடிதமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்தக் கடிதம் உள்ளடங்கிய கோப்பு கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |